சர்வேஸ்வராய நம:

Ro: 24

# வீரமாமுனிவர் அருளிச்செய்த

1 திருக்காவலூர் கலம்பகமும்.

2 அன்னையழுங்கலந்தாதியும்.

3 தேம்பாவணியிற் சிலபாடலும் - (4) வண்ணமும் - (5) வாமன் சரித்திரமும். (6) புத்தகப்பெயரட்டவணையும்.

செந்நெனக்கல்விச்சங்கத்து மாநேசராகிய

## அ - முத்துச்சாமிபிள்ளையவர்களால்

செய்யப்பட்ட

# வீரமாமுனிவர் சரித்திரமும்.

இவராலும் - சிலவித்துவான்களாலும் பலபிரதிகளைக் கொண்டு சொல்நடைக்கும் பொருணடைக்கு மொப்பப்பழுதறவாராயப்பட்டு - தஞ்சைநகரத்துப்பூங்கொடி - சின்னப்பிள்ளை - குமாரர் - ள-ள - மரியப்பிள்ளையவர்கள் - தம்பி

## அப்பாவுபிள்ளையென்பவராலும்.

ஞானதிக்கப்பிள்ளையென்பவராலும்.

இரக்ஷணிய - ௵ ௲அ௱௪௰௩-ல்.

1843 ல்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

இதன்விலை - ரூபா, கவ.

MARAIM...

வீரமாமுனிவர்செய்த

# தேம்பாவணிப்பாடல்

ஈறில்நன்மைநிறைவுமோர்குறைமுற்றின்மையுந்தொழத்தகுந்தெய்வ - மாறிலியல்பேவேரிதாய்க்கிளைத்துவரும்பலசினையெனநூலோர். ஆறிலக்கணங்களுரைத்தவையுள்ளோனுண்டெனையிலனலனென்றார் தாறிலகுடனாமைவரிந்தன்னசாற்றுதும்புன்சொலாலவையே.

எ - து, முட்டின்றியெல்லாநன்மைநிறைவுமெல்லாக்குறையின்மையுமென்றிவ்விரண்டேயெவரும்வணங்கத்தகுமெய்க்கடவுட்குரியமாறாதகுணமதாமே - இதுவேராகக்கொண்டுகிளைத்தபலகொம்புகளின்றன்மையாமிக்குணத்தை விரித்துநூலோர்மெய்யானதேவனையறிவதற்காறிலக்கணங்களைச்சொலவியவைவெயலாமுடையோன்றேவனேயென்று - அவற்றுளொன்றாயினுங்குறைந்தெல்லாவற்றையுமில்லாதவன்றேவனல்லனென்றார். ஆகையாலவ்விறந்தவிருளருமியனைமையாலெழுதிறாற்போலநானுமென்புன்சொல்லாலதேவாறிலக்கணங்களைச்சொலவிக்காட்டுவேனென்றான்றூலைசெயன்க.

தன்வயத்தாதன்முதலிலனாதல்தகும்பொறியுருவிலனாதல் - *
மன்வயத்தெல்லாநலமுளனாதல்வயின்றொறும்வியாபகனாதல் *
பின்வயத்தின்றியொருங்குடனனைத்தும்பிறப்பித்தகாரணனாதல் *
பொன்வயத்தொளிர்வான்முதலெல்லாவுலகும்போற்றுமெய்யிறை
- - - - - [மையினிலையே.

எ - து, தன்னலாதலுந்தொடக்கமின்றியாதலுமைம்பொறிக்குரியவுருவிலனாதலுநிலைபெற்றசகலநன்மையுளனாதலுமெங்கும்வியாபகனாதலுந்தன்னையல்லாதொருதவியின்றியெல்லாவற்றையுமொருங்குடன்படைத்தவாதிகாரணனாதலுமென்றிவ்வாறிலக்கணங்கள் - பொன்னொளிர்வானுலகுமுதலெவ்வுலகும்வணங்கத்தகுமெய்க்கடவுளின்றேவதத்துவமிதேயென்றனென்க. - - *

அறக்கடனீயேயருட்கடனீயேயருங்கருணாகரனீயே - - *
திறக்கடனீயேதிருந்துளமொளிபடஞான *
நிறக்கடனீயேநிகர்கடந்துலகின்னிலையுநீயுயிருநீநிலைநான் *
பெறக்கடனீயேதாயுநீயெனக்குப்பிதாவுநீயனைத்துநீயன்றோ. *

கார்த்திரள்மறையாக்கடலினுண்மூழ்காக் கலையிலாதொளிர் பரஞ்சுடரோ - நீர்த்திரள்சுருட்டிமாறலையின்றிநிலைபெறுஞ்செல்வநற்கடலே போர்த்திரள் பொருதக் கதுவிடாவரணே பூவனந்தாங்கிய பொறையே - சூர்த்திரள்பயக்குநோய்த்திரள் துடைத்துத்துகடைத்துயிர்தருமமுதே. - - - *

வீரமாமுனிவர்செய்த

# வண்ணம்.

*தான தந்தன தான தனு தனு தன. தான தந்தன தான தனு தனு
தன—தந்தா தனதன தானதன தானன- தந்தா தனதன தான
தன தானன— தனன தனன தனனத் தானனு.

காரகன்றொலிவானிலெலோனெலோனிரு-டரவங்கிடுதீபநிலாநிலா
விரு—ளண்டாவொளியினனீறிலனாதிய னுண்டாயவையமைதா
னொருவனுதிய—னேரமொன்றிலனேரவினுவினுவின- னேரமைந்
தொருயாதிதகாதகாரிய—நொந்தாபரனருடவியதயாபர.னந்தா
நளினகலாபரபராபர—காரணன்குறையாவுமிலானிலானென. வா
றருங்குணயாவுமுளானுளானென்ன—மங்காவறிவுடை ஞாபகவியாப
க-னெங்காவலனொரு வாவலிமனுயுதன் — பொருவுமுருவு மிலன்
முற்றேகனே. (௯)

காயநின்றிழிமாரிதிமிதிமியென-பாயும்வெண்டிரையோதைகுபீ
ர்குபீரென— செந்தாமரைமலர்வாவிகள்சிவேலென-பைந்தாதவி
ழ்பொழினிணிலங்கமேறலென— வீயினங்குழனூதியிமியிமியென-
மேயனஞ்சிகியாடிஞுறுஞுறுவென — சிந்தேபரவியநீர் நுரைவிளை
லென-வந்தேயுழியுழிபூவயல்பசேலென—காடுமண்டினவாடுமொ
லீர்மொலீரென- பாயும்வன்றகரோதையடர்படரென—கன்றுமி
ரபலவானழகள்சுரோலென - வின்றேறெழுகுறும் பூதநளிநாடி
னன் —பொலியமருவிமனுவுற்றனரோ. (௰)

சூரவுய்ப்பர்விடாதுபளீர்பளீரென- சூரியன்கதிராடைமளீர்மளீ
ரென—மின்றாரகைமுடியாகமதிமேவடி-யுன்றுயெனவருவாயுருவ
தரயினை—சாரலொன்றியகூகைகுகூகுகூவென - வாரலொன்றிய
கோழிகொகோகொகோவென—சிந்தாமணியெனயாமநடுவேளை
யில்-வந்தாயொருகுகைவானவர்கடாடொழ— சூழிறைஞ்சியகோ
வரிரீரிரீரென - கோளெழுந்தொருமீனும்வரீர்வரீரென—மின்றார்
முடியினர்நாடியடிதாழவு-நின்றானைவரும்வாழியெனவாழ்தரு—
வெருவிலளவிலருணர்சீதனே. (௰௯)

சோனையங்கரமாரிகொளீர்கொளீரென - ஞூறிறந்தொழிவானை
மயந்நீரொநீரென—நந்தார்மகிழ்வுறநோய்வினையமாறினை - நற்
தாரயமூலகாரவருளாயினை — வானிழந்தனதீய விடர்விடரென-
வேனைநன்றெனயாவுநடர்நடரென — பின்றுநெறிநடைவேதமு
றைபோதினை-பொன்றுமிறைமையினுமதிலேபேணினை— தாயுடம்
பிழிசோரிகுமீர்குமீரென - வாழைகண்டதிர்பூமிபகீர்பகீரென—
நொந்தாயெனதுயிர்வாழவுயிர்வீயினை - யெந்தாயதிபரியாலபச

நாயக—கவிஞர்கவிதையினின்சேசுவே. - - (௯)
நேரொழுந்தும்பாதருஞோல்ஞோலென - சேரவந்திருதாளைவிடே
ன்விடேனென - கண்டாவியபுனலோடவைவிளாவினள் - தண்டார்
நறுங்குழலோடிநதிநீவினள்—நீவியொன்றியவாயும்விளேல்விளே
லென - காவியன்றிரள்பூசியருநருவென— நந்தாமுறைறசமழ்நாண
விளாவீசினள் - பைந்தாதவிழ்மலர்பூமியடிநேடினள்— நேடியுஞ்
பதமாலையிறேனிறேனென• நீடுகண்டிலளாகியுயேனுயேனென—
சென்றாளருகயாலமலைடீதினை - யுன்றாணிமதலேலனையெனுமானி
னி—யொருவிலருநல்வினையிற்கோதையே. - - (உறு)
நேயநின்றிருநாமவிழாவிழாவென - தூயநின்றிரிபாணர்தருதரு
வென—சங்கீதமருவுதாளநிலவீணைக - ளங்கீதமொடுனைநாளுநனி
பாடின—வீடுபண்படுமோதைசெறுசெறுவென - நாடுநின்பெயர்
மாலைதருதருவென—தண்டாதலர்முகமாணைமமிகவாயிதழொண்
டாமணாமதுவீகவிழ்நீருக — நீருகந்தனை மேவியெழே னெழே
னென - சேரவந்தகை நாடிநலீர்நலீரென — தன்காவலனேடு
மேவருலையாவையு-முன்காவலிடுசெசீவியெனுமாதவ— ஞாயிறினு
முனையணைபொற்பாவையே. - - (ஞ)

ஆரமுண்டெழுவீரமுழாமுழாவென - கூடொழுந்ததிரோதைமு
டாமுடாவென—வெஞ்சூலமழுவில்வாளிவசிவேலிவை யஞ்சாதெ
திரொருபாதையுனையாவின — ளாவிகொண்டினி யானுமிரோனிரே
னென - மேவிவந்துறநீயுநிலேனிலேலென — வல்பூறியபுகழாகி
மொழிவாயின - வின்பூறியவருடேவகருஞசனி—யாசனம்பொலி
ராசனடரடிரென - கூசவெட்பனடைசாலதொடர்தொடரென —
வந்தேகொடியர்கைவேல்வெருவிலாடலை - தந்தேயுனதடிமேவிய
பாரபரா—செருவிலரியின்விறலிற்பேதையே. (ஞறு)
ஆயமஞ்சனயாயநிலாநிலாவென• தூயநிஞ்புகழ்நேரம்விலாவிலா
வென—வம்பேரிளமயில்ஞானமுதிர்பேதையள். பொம்பேபொனு
மலைமீதுதவமேவினள்—மேவலன்பதிகாவலிடரிடரென - நெர்வி
டுந்தளைகூறகலீர்கலீரென— நின்றேறதலையறவீமமிலநீடின• ளொ
ன்றேறநிகாறவீரசயமாடின—ளாடியும்பருடம்வானில் அஆஅஆவெ
ன• பாடியங்கனைவோரும் ஒஓ ஒஓவென. விண்டாயினதலைதானிரு
கையேமிசை - கொண்டாளுனதடிநாமமுடிகுடினள— திருவுமரு
ளும்பெறுகித்தேரியே. - - (

ன்னும் அரியபிரபந்தமொன்றினைச் செய்தனர் - அப்பிரபந்
தத்தைமுன்னிவ்விடமிருந்த கும்பகோணங் கோர்ட்டு
சிரஸ்தாதாராகிய - மஹா ௱-௱-சாமிநாதமுதலியாரவர்கள்.சம
ஸ்கிருதவித்துவான்கள்தமிழ்ப்புலவர்கள்முதலியோரைச்சபைகூ
ட்டி அரங்கேற்றுதல் செய்வித்து அதனைக்கேட்டயாவருமகிழ்ந்
துமிகவுங் கொண்டாட இரத்தினமிழைத்தகண்டிகை மாலையும் -
விலையுயர்ந்தவுபயசூரத்துச்சாலுவையும்-வெகுமதியாகவளிகப்
பெற்றனர். அன்றியும்.சென்னைககலவிச்சங்கத்துப்பிரதானபண்டி
தர்களுமற்றசாஸ்திரிகளும் - வித்துவான்களுமிப் பிரபந்தத்தி
ன்சொற்றிறத்தையும் - பொருட்டிறத்தையுங் கண்டு வியந்து
மகிழ்ந்துபுகழ்ந்து இப்பிரபந்தமிகுந்த பயனுளதென்றுசமஸ்
கிருதத்திலும் தமிழிலுஞ்சாத்துகவிகள்பாடியளிக்க - அவைகளை
யந் நூன்முடிவிற் சேர்த்தச்சிற் பதிப்பித்தனர். இதுவுமல்லாம
ல் - புறச்சமயத்தாரைச் சாதாரணசத்தியவேதத்தி னியாயப்பிர
மாணங்களைகொண்டுபோதித்துத் திருப்பியும் - ஏழையாதேசி
களுக்கன்னவஸ்திராதிகளையளித்தும்வந்தனர் -மேலும்இவர்வீர
மாமுனிவருடைய சரித்திரத்தைத் திரட்டி - செப்பருமலங்காரக்
கோவையாக்கிஇங்கிலீசுபாஷையில்மொழிபெயர்த்துஅச்சிற்பதி
ப்பித்ததுமன்றி - இந்துக் கிறிஸ்டியன் அப்சர்வரொன்னு மொரு
புத்தகம்-தமிழுமிங்கிலீசுமாகவெழுதினர் - அன்றியும்-தேவார
முதலிய-அநேகங்கீர்த்தனைகளுஞ்செய்தனர்.

இப்படிப்பட்டகீர்த்திப்பிரதாபம்பெற்றவேதவிற்பன்ன வித்து
வசிரோமணிக்கு ௲அ௱சய(வ) [illegible] கடவுள்மோட்சா
னந்தமேயின்ப செல்வபாக்கியத்தையளிக்கச் சித்தமாகிஅவரைத்
தம்முடையதிவ்விய சந்நிதானத்திற்சேர்த்துக்கொண்டார்.

தேம்பாவணிப்பாடல்.

தேறுந்தயையின் முனிவோய்நீசினத்திற்கருள்செய்கனிவோய்நீ
கூறுங்கலையற்றுணர்வோய்நீகூறுந்தொனியற்றுரைப்போய்நீ *
மாறும்பொருள்யாவிலுநின்றேமாறுநிலைகொள்மாயோய்நீ[யோ
யீறுந்தவிர்ந்துன்புகழ்க்கடலாழ்ந்தெனக்கேகரைகாட்டருளா
ஒளிநாக்கொடுவான்சுடர்புகழவொளிநாக்கொடுபன்மணிபுகழக் *
களிநாக்கொடுபற்புள்புகழக்கமழ்நாக்கொடுகாமலர்புகழத் *
தெளிநாக்கொடுநீர்ப்புனல்புகழத்தினமேபுகழப்படுவோய்நீ *
அளிநாக்கொடுநானுனைப்புகழவறியாமூகையுணர்த்தாயோ. *

# வீரமாமுனிவர்சரித்திர

## வரலாறு.

இந்துதேசத்திற்குவந்திருந்து சமஸ்கிருதமுந் தமிழுஞ் சம்பூரணமாயுணர்ந்து - இத்தேசத்துப்பூர்வ விருத்தாந்தங்களையும்பற்பலகலைஞானங்களையுமாராய்ந்தறிந்த இராஜரிஷியாகியவீரமாமுனிவர் லத்தீன் பாஷையிலெழுதிவைத்த செந்தமிழிலக்கணத்தை இங்கிலீசுபாஷாந்தரப் படுத்தியச்சிற் பதிப்பிக்கும்படி சென்னைக்கல்விச்சங்கத்துக்குத்தந்துமீளவும் - இங்கிலாண்டுதேசத்திற்குச் சென்றங்கிருக்கின்றபெஞ்சமின் பாபிங்கடன்துரையவர்கள் வீரமாமுனிவருடைய பிரபந்தங்களெல்லாவற்றையுந் தேடிவைத்துக்கொண்டிருக்கிறவராதலாலும் - அவற்றிற்சிலபிரபந்தங்களைலண்டன் பட்டணத்திலே தானேயச்சிற் பதிப்பித்து இத்தேசத்துக்கனுப்பிப் பிரபலம்பண்ணவிருப்புற்றிருக்கிறவராதலாலும்வீரமாமுனிவருடைய சரித்திரமும் விவரமாய்வேண்டுமென்றுகேட்டுக்கொண்டதின்மேல் - இப்பொழுதுசென்னைக்கல்விச்சங்கத்திற்குத்தலைவரான மாமணிகளுக்குள்ளே விலையேறப்பெற்றவயிரமணியாகவிளங்கிச் செந்தமிழ் - கொடுந்தமிழென்னுமிருவகைத்தமிழினையு முணர்ந்து இலக்கணவிலக்கியங்களையுந் தெளிந்து அச்சங்கத்துக்குக் கலைஞானத்தாயாகிக் கல்வியமுதூட்டிக்கருணைமுகங்காட்டி யதனைக்கனிவாகவளர்த்துவருகின்ற ரிச்சார்டு - கிளார்க்குத்துரையவர்களுடையவுத்தரவின்படியேவீரமாமுனிவருடையசரித்திரமிப்பொழுதெழுதப் பட்டவரலாறெப்படியென்னில் - முன்னாலே அருந்தமிழ்க் கலைகளையாய்ந்து - அதேசபிரபந்த ஆசிரியராயிருந்தபுதுச்சேரிவித்துவான் சாமிநாதபிள்ளையென்பவர் வீரமாமுனிவரதுசரித்திரத்தை விருப்புற்றாய்ந்து - ௲எ௱௰அ-ம்-௵- எழுதிவைத்ததைக்கொண்டும் - கொழுகொம்பில்லாதலைகொடிபோலுங் கொழுநனில்லாக்குலக் கொடிபோலும் ஆதாரமின்றித்தேய்ந்துகிடந்த - ஆரியம் - தெலுங்கு - மலையாண்மைமுதலிய இத்தேசபாஷைகளிற்றேர்ந்து தமிழிலக்கணவிலக்கியத்தையொருங்குணர்ந்து சென்னையிற் கல்விச்சங்கம் நாட்டுதற்கு வேண்டுமுயற்சிசெய்தமைத்து அப்பல் கலைச்சங்கத்தைப்பாண்டியனைப்போலும்பாதுகாத்திருந்த - பிரான்சிஸ் - உவைத்து - எல்லீசுதுரையவர்களுடைய அநுமதிப்படி - ௲அ௱௰௪-ம் - ௵ - வீரமாமுனிவர் வாசம்பண்ணினஸ்தலங்கடோறுஞ்சென்று

அவர்செய்தநூற்களைச்சேகரம்பண்ணிக் கொண்டுவரப் போயின
பொழுது அங்கங்கேயவருடையவர்த்தமானங்களையறிந்தும் கே
ட்டுமிருந்தசிஷ்வருக்கங்களை வினவித்தெரிந்தெழுதி வைத்திருந்த
குறிப்புகளைக்கொண்டும்- வீரமாமுனிவர் தமிழிலுண்டு பண்ணி
னபிரபந்தங்களினுந்தமிழைலத்தீன் முதலியபாஷைகளில் மொ
ழிபெயர்த்தபுஸ்தகங்களிற்கண்டிருக்கிற பற்பலசங்கதிகளைக்கொ
ண்டும் நிச்சயித்து- ௲அ௱௨௰௨-ம்- ௵ · சென்னைக்கல்விச்சங்க
த்தில்-தலைமைப் புலமையுத்தியோகஸ்தர்களி லொருவராகிய-
அ-முத்துச்சாமிபிள்ளையவர்களாலெழுதப்பட்டது.

# வீரமாமுனிவர்சரித்திரம்.

இராஜரிஷியாகியவீரமாமுனிவருடையசரித்திரத்தைச் சொ
ல்வதற்குமுன்அவரிந்தச்சிந்துநாட்டுக்குவந்தவரலாற்றைச்சொல்
வது யதற்சடுத்தகருமமாதலா லவ்வரலாற்றைச்சுருக்கமாயாரம்ப
த்திற்சொல்லப்பட்டிருக்கின்றது- அஃதெப்படியெனில்.உலகரட்
சகரானசேசுகிறிஸ்து நாதர் அவதாரம்பண்ணின அசியகண்டத்
துக்குட்பட்டபூகோளத்துக்குநடுப்பட்ட திருநகரமாகிய செருச
லேமிலிருந்து அதற்கடுத்த.அராபி.பார்சுதேசங்களின்வழியாகஇர
ட்சகருடையஅனுக்கிரகத்தாலவருடையபிரதானசீஷர்களிலொரு
மாதவரிஷியாகிய-அர்-தோமையாரென்னும்அப்போஸ்தலரான
வர்சத்தியவேதவிசுவாச வித்தையிந்த இந்துதேசத்தி லாதிகால
த்திலூன்றிமுளைப்பித்தார்.இவ்வண்ணமேசத்தியவேதவிசுவாசவி
த்தானது இரோப்புக்கண்டத்திலுயிரட்சகருடையசீஷர்களால்மு
ளைக்கப்பட்டு-திவ்விய விருட்சமாக வளர்ந்துபடர்ந்து இரோமை
நகரத்தில்நிலைகொண்டபின்பு அந்நகரத்திற்றிருச்சபைக்குக்கா
ணப்படுந் தலைமைபெற்ற அரியபீடாதிபதியாகிய.அர் - பாப்பா
னவர் கற்பித்தபிரகாரம் - சேசுசபைக்குருக்களிலொருவராகிய-
அர்- சவேரியாரென்னுந் திருத்தவமுனிவரானவர்போர்த்துகீசுக்
காரர் நூதனமாயிவ் விந்துதேசத்திற்குவரத்தொடங்கினகொந்
சகாலத்துள்ளாக இந்நாட்டுக்கெழுந்தருளிவந்து அநுதினம்புரிந்
த அபரிமிதமானஅர்ப்புதங்களென்னும்- அமுதமாரியால்முன்மு
ளைத்திருந்தவேதவிசுவாச முதலானசுகிர்த புண்ணியங்களோங்கி
வளரத்தலைப்பட்டன- அதன்பின்புஇந்நாட்டுக்குவந்த இரோமை
ப்பிராமணனென்னுந் தத்துவபோதகசுவாமி கடல்மடை திறந்
தாற்போலவிரித்துக் கதிரவனொளிபோல விளக்கி வியாக்கியான

# அ-முத்துச்சாமிபிள்ளையவர்களின்
## சரித்திரச்சுருக்கம்.

உண்மைவிளக்குஞ்சாதாரணசத்தியவேதத்திருச்சபையி
ல்பிரதானசேசுசபைக்குருப்பிரசாதிகளாய்ச் சிந்து
தேசதிற்செழுந்தருளிவந்த தத்துவபோதகசுவாமி வீரமாமு
னிவர்,சாங்கோபாங்கர்முதலிய தபோதனர்கள்,சமஸ்கிருதம்,தமி
ழ்தெலுங்கு.முதலியபாஷைகளைச்சம்பூரணமாயுணர்ந்து.இத்தே
சத்துப்பூர்வவிருத்தாந்தங்களையும் - பற்பலகலைஞானங்களையும்-
நன்குகவாராய்ந்தறிந்து நிகரற்றபாண்டித்திய வல்லவர்களாய்ப்
பற்பலவேதவிவரணவுன்னதபிரபந்தங்களை அருளிச்செய்தனர்-
அவைகளைச் சென்னைக்கல்விச்சங்கத்துமாநேசராகியும்- இங்கிலீ
சுபாஷையிற்பண்டிதராகியும்-தமிழிலக்கணவிலக்கியஆராய்ச்சியி
ன்மிக்கபுலவராகியும்-வேதவிற்பன்னராகியும்-விலையுயர்ந்தமாணி
க்கதீபம்போலவிளங்கியிருந்த - அ-முத்துச்சாமிபிள்ளையென்
பவர்மிகுந்த பிரயாசப்பட்டு மஹாவருமையாகச் சம்பாதித்து
அவைகளின்சட்டுரையலங்காரத்தையுங்கருத்தினுட்பத்தையும்-யா
வருங்கேட்டு வியப்புறும்படியாக நாடோறும்பிரசங்கித்துவந்த
துந்தவிர அவற்றின் அருமைகளைச்சென்னைக்கல்விச்சங்கத்தின்பிர
தான தலைவர்களாகிய-பிரான்சிஸ்-உவைத்து-எல்லீசு துரையவர்க
ளுக்கும்,ரிச்சார்டு-கிளார்க்குத்துரையவர்களுக்கும் - ஜெனரல்-
மல்க்கம் துரையவர்களுக்கும்-பெஞ்சமின்-பாபிங்கடன் துரைமு
தலியஅநேகந்துரைகளுக்கும்-விளங்கவிரித்துரைத்து இரோப்பு
தேசத்துக்கல்விச்சங்கத்திலும் பொன்மலையுச்சிமேலெறிக்குஞ்
செஞ்சுடரொப்பப்பிரகாசிக்கும்படியாகவுஞ்செய்தனர்,மேலும்
முன்னோர்கையெழுத்தாயெழுதிப்படித்துவந்தசெபங்கள்,மந்தி
ரங்கள் -பிரார்த்தனைகள்முதலியவைகளைப்பரிசோதித்து-லத்தீன்
முதலிய மூலபாஷையின் முதனூல்களுக்கிணங்க வொத்திட்டுப்
பிழையறத்திருத்திஅவைகளையொருபுத்தகமாகச் சேர்த்துஆத்து
மவுத்தியானமெனப்பெயரிட்டுப்புதுவை மேற்றிராணியா ரவர்க
ளநுமதியின்மேல் அச்சிற்பதிப்பித்தனர். சாதாரணசத்தியவேத
க்கிறிஸ்தவர்களொருவரும் நியாயஞ்சொல்ல மாட்டார்களென்ற
சங்கொண்டு பொன்னம்பலஞ் செய்தவேத விகற்பத்துக்குத்
தக்க கண்டனையாகப்பற்பல நியாயப்பிரமாணங் களைக்காட்டி-
வேதநுட்பங்களைப் புகட்டிச் சிறந்த அலங்காரமாய் - தெவிட்
டாதமதுரமாய்ச்செப்பரும்பொருளாய்ப்பிணித்து-திக் காரமெ

ங்கமாய் - வேதப்பிரசங்கமாய்த் தமிழிலுஞ் சமஸ்கிருதத்திலுமெழுதிப்பரப்பிய வேதசாஸ்திரங்களென்னும் விசாலமான தடாகங்களில்நின்று பாய்ந்தஞானப் பிரவாகங்களால் முன்வளரத்தொடங்கினவேதவிசுவாசமானது பணைகளைவிரித்துப்படர்ந்துசெழித்துத்தழைத்து அஞ்ஞானக்கடுங்கானலைப்பரப்பியழற்றும் புறசமய விசுவாசமாகியபாலையிலலைந்துநலிந்துவந்தடைந்தோர்கள் தீராவிளைப்புத்தீர்த்துமாறுச்சுகமுறநிழற்றுகின்றதிவ்வியவிருட்சமாகவோங்கிவிளங்காநின்றது.

தத்துவபோதகசுவாமி இரோமைப்பிராமணரென்னப்பட்டதென்னையோவெனில் - பிரமம் என்கிறபதத்துக்கு - எங்குமிருக்கிறவரென்கிறபொருளல்லாமலும் - வேதமென்கிற அர்த்தமுமிருக்கிறதினால்-பிராமணரென்பது வேதமுணர்ந்தவர்களென்றபயனும் - ஆதலால்-இரோமைப்பிராமணரென்றபொழுது இரோமையிலிருந்துவந்த வேதியரென்றபயனும்- இஃதிப்படியாயினும்- மதுரையிற்கூடின இத்தேசத்துப் பிராமணர்தத்துவபோதகசுவாமியைநீராரென்றுகேட்டபொழுது அவர்தம்மைப்பிராமணரென்று அபத்தஞ்சொன்னதாயவர்கருத்தும்- அச்சொற்பயனுமறியாதசிலர்தத்துவபோதகசுவாமிமேல் தூறுசொல்லத்தொடங்கினார்கள்- அதேதெனில்-பிராமணரென்பது-பிரமதேவனுடையவம்சஸ்தரென்று சிலர்பயன்படுத்துவர் - அதுமெய்யாகில் மற்றைமூன்றுவருணத்தாரும் பிரமதேவனுடைய வம்சஸ்தரென்றே சொல்லவேண்டும்-எவ்வாறெனில்-பிரமதேவனுடைய நெற்றியிலே பிராமணர்பிறந்ததுபோலே-க்ஷத்திரியர்தோளிலும்- வைசியர் துடையிலும் - சூத்திரர் பாதத்திலுமுற்பத்தியானார்களென்று சொல்லப்படும் - ஆதலாலெல்லோரும் பிரமாவினிடத்திலிருந்து பிறந்தார்களென்றுசொல்லலாகுமே-அப்படியிருக்கப்பிராமணர் மாத்திரம் பிரமதேவனுடையவம்சஸ்தரென்றெப்படிசொல்லலாம்- ஆதலால்-பிராமணரென்னுமொழி தொழிற்பெயரே யல்லாமல்வம்சப்பெயராகாது-அஃதெப்படியெனில்-வேதமுணர்ந்தவர் வேதியரென்பதுபோலப்பிரமம்-என்னும் வேதமுணர்ந்தோதுபவரெந்தத்தேசத்தாராயினும் அவரைவேதியரென்றும் - பிராமணரென்றுஞ்சொல்லலாம் - தத்துவபோதகசுவாமி இப்பயனேகருதினவராதலில் - தாமுண்டுபண்ணிய வேதவியாகரணப் பிரபந்தங்களில்-வேதசாஸ்திரிகளுக்குப் பிரமவாதிகளென்றும்- பூதரு

டையகுருக்களாகிய ஆருசன் - கைப்பாசனிவர்களேயூகப்பிராமணமொன்றும் அநேகவிடங்களிற் பிரயோகம்பண்ணியிருக்கிறார்- இதுவுமன்றி- தத்துவபோதகசுவாமி இரோமாபுரிக்குச்சென்று தமது சவிஸ்தாரங்களைவிளக்கம் பண்ணினபொழுது தம்மைப் பிராமணரென்றது அசத்தியமல்லவென்று அங்கேகூடின விசுவாசசங்கத்தாருக்குமெய்ப்பித்தார். இவ்வரலாறு தரங்கம்பாடியில் அச்சிற்பதித்ததிருச்சபைசரித்திரமென்னும்புத்தகத்திலே - ௨௱௬௰௮-ம்-பக்கத்திலுமின்னும் பலபுத்தகங்களிலுங்காணப்படும்.

இதன்பின்பு மேற்சொல்லியபடிக்குத் தத்துவபோதகசுவாமியால் தழைத்துவிளங்கின வேதவிசுவாசத்தருவானது நிலைபெற்றிருக்கும்படி தொடர்புவிடாத மாலையாக வரப்பிரசாத நிபுணராயரியசாமர்த்தியம் பொருந்திய பலபலசபைகளில்வருகின்ற வெண்ணிறந்தகாரணக்குருக்களில் முக்கியமாய்ச் சேசுசபைக் குருக்கள் தத்துவபோதக சுவாமியைத்தொடர்ந்து அவர்நிரப்பிவைத்தவேதவிவரணசாஸ்திரங்களாகிய உளர்றடங்காத தடாகங்களில் நின்று இடைவிடாமல்முயன்றிறைத்தஞானப்பிரவாகங்களால் மேற்சொல்லியவேதவிசுவாசத்தருமெலிந்துவாடாமலெந்நாளும் விருத்தியாகிவிளங்கிக்கொண்டுவராநின்றது.

இப்படிவருகையில் இப்பொழுதிந்நாட்டில் வீரமாமுனிவரென்றும் - நம்பூரி ஐயரென்றுஞ் சொல்லப்பட்டவர்கள் செல்வஞ்செழித்தோங்கும் இத்தாலிய தேசத்திலுயர்ந்த கோத்திரத்திற் பிறந்துவளர்ந்து இரோமாபுரிமடத்தில் வேதவிவரண சாஸ்திர முதலியபலநூற்களை ஐயந்திரிபில்லாமல் நன்றாய்க்கற்றுணர்ந்து சேசுசபைக்குட்பட்டுக்காமாதிகளைவர்ச்சித்து - சிரேஷ்டதவம்வகித்துப்பாலசந்நியாசிகளாயிருந்தமையாலவ்விருவரையும் - அர்ப்பானவர்தெரிந்து இரண்டுகலைஞானமணிகளென்றருளிச்செய்து அவர்களையித்தேசத்திற்கனுப்பினார் - அவ்வண்ணமே - ௲௭௱-ம் வருஷத்தில் - இரோமாபுரியிலிருந்திந்த இந்துதேசததிற்கு வந்த அவ்விருவரில் - நம்பூரி ஐயரென்பவர் சேரநாடாகிய மலையாளத்துக்குச்சென்றுமலையாண்மையிலும் - ஆரியத்திலும் நிகரில்லாப் பாண்டித்தியமுள்ளவரா அப்பாஷைகளிலெண்ணிறந்த வேதவிவரணசாஸ்திரங்களையுங் காவியபிரபந்தங்களையும் விளக்கியெழுதிவேதோபதேசஞ்செய்துவீற்றிருந்தார்.

வீரமாமுனிவரோவெனில் - இந்தத்தமிழ்நாட்டிற்கு வந்து

தமிழிலக்கணவிலக்கியங்களெல்லாமாராய்ந்து தேர்ந்துஒப்பற்ற சம்பூரணவரப்பிரசாதவித்துவானாகியபின்பு-தத்துவபோதகசுவாமி நிறைத்துவைத்தவேதவிவரண சாஸ்திரங்களென்னுந் தடாகங்களினுடையதிருச்சுவை மாறுதிருக்கத்தொடுத்த தன்மைபோல வேதவிவரணசாஸ்திரங்களைத்துலக்கம் பண்ணியும்- மேற்சொல்லிய வேதவிசுவாசவிருக்ஷத்துக்கு விரோதமானவைகள் வந்து அவ்வேதவிசுவாசத்தருவின்செழிப்பைப்பார்த்து மேல்விழுந்து பூப்பிஞ்சு முதலானவைகளைநஷ்டம் பண்ணவொட்டாமல் திட்டமானவேலியிட்டமேரையாய் விகற்பச்சங்கையணுகாத மெய்ஞ்ஞானத்தையூன்றி மேலான நியாயங்களாற்பிணித்த வேதப்பிரபந்தங்களைவிளக்கப் பண்ணியும்-வேதவிசுவாசத்தருவைக்காப்பாற்றவேதவிவரணசாஸ்திரத்தடாகங்களில் நின்று மேற்சொன்னபடி வேதியரிடைவிடாதுமுயன்றிறைக்கும் வருத்தவேதனையின்றியெளிதாய்ப்பாய்ச்சல்சூத்திரக்கால்விடுத்தவிதமாய்ச்சூக்ஷமாகத்தொகுத்ததுங்கநூற்களைப்பாடியும்,வீரமாமுனிவர்அற்புதமேரையாயமைத்தநூல்முதலாகியஅரியசெயல்களைக்கண்டுபிரமித்துஆச்சரியப்படாதாரில்லை.

அதெப்படியெனில்- வீரமாமுனிவர்தமது ஜென்மதேசத்திற்றானேதமது சுயபாஷையாகிய இத்தாலிய பாஷையோடெபிறேகிறீக்கு,லத்தீன் - பொர்த்துகீசுமுதலநேகப்பாஷைகளிலேதேர்ந்தபாண்டித்தியராயிருந்த தன்றியும் - இந்து தேசத்திற்கு வந்தபின்பு சமஸ்கிருதமுந் தெலுங்கும் படித்து விசேஷமாய்த் தமிழ்ப்பாஷையைநானாவித இலக்கணங்களோடுமுழுதும் ஐந்துவருஷத்தில் நன்றாய்ப்படித்துத் தேர்ந்து இந்நாட்டிலே தொன்றுதொட்டிருந்த திருவள்ளுவர் முதலான ஞானிகள் நல்லாசிரியர் நற்கவிவாணர்களிவர்களாற் செய்யப்பட்ட சகலவிதமான இலக்கியங்களை இருபத்தைந்து வருஷமாராய்ந்துபரிசோதித்துக்கொண்டுவந்தபின்பு இத்தேசத்தாருக்குள்ளே பரம்பரையாய்த்தொடர்ந்துவரு மநந்தவித அஞ்ஞானநோய்களைத்தீர்க்கும் அருமருந்தாக இனிச்சொல்லப்போகிற பற்பல அரியநூற்களைச்செய்தார்.அந்நூலகள் பொன்மலையுச்சி மேலெறிக்குங் கல்விச்சூரியனை எங்கெங்குந் தோன்றிப்பிரகாசித்து விளங்குந்தன்மை கல்வியாராய்ச்சியுள்ள கற்றோரெவர்க்கும் விசிதமாய்த் தெரிந்திருக்கின்றதாமே.

மேலுமிவரிந்தத்தேசத்தில் வந்தநாள்முதலாகப் புலால்மாம்ஸங்களை நிவர்த்தித்து இரண்டு தமிழ்த்தவசிப் பிள்ளைகளைப்பரிசுத்த அன்னபாகஞ்செய்யச்சொல்லித்தினமொருபொழுதுமாத்திரம் போசனம்பண்ணிக்கொண்டிருப்பார்.

தமதுமடத்திலிருக்கும்போது கோபிச்சந்தனம்நெற்றியிலிட்டுக்கொண்டு தலைக்குச்சூரியகாந்திப்பட்டுக்குல்லாவும்- அரைக்கு நீர்க்காவிச்சோமனுந் திருநெல்வேலிக்கம்பிச்சோமன்போர்வை முக்காடுமிட்டுக்காலிற் பாதகுறடும் போட்டுக் கொண்டிருப்பார்- இவர்வெளியிற்சாரிபோகும் போதுபூங்காவி அங்கியும், பூங்காவி நடுக்கட்டும்- வெள்ளைப்பாகையும், இளங்காவியுத்தரியமுக்காடும், கையினிற்காவியுருமாலையும்- காதில்முத்துக்கடுக்கனுங் கெம்பொட்டுக்கடுக்கனும் - விரலிற்றம்பாக்குமோதிரமும் - கையிற்றண்டு கோலும- காலிற்சோடுடனும் வந்துபல்லக்கின்மெத்தையின்மேலிட்டிருக்கும் புலித்தோலாசனத்தின்மேலெழுந்தருளி யிருந்து உபயவெண்சாமரைவீசவும், இரண்டுமயிற்றோகைக் கொத்திரட்டவும்- தங்கக்கலசம் வைத்தகாவிப்பட்டுக்குடைபிடிக்கவுஞ்சாரி போவார். இவரிறங்குமிடங்களிலும் புலித்தோலாசனத்தின் மேலுட்காருவார்.

இந்நாட்டிலுள்ள அஞ்ஞானிகளைச் சர்வேஸ்வரனுடையவேதமார்க்கத்திற்குள்ளாக்கும் படிக்குத்தமது தேசாசாரவழக்கங்களைமாற்றி- தமிழ்த்தேசாசாரவஸ்திராபரணங்கள் பூண்டு தேசங்கடோறும் யாத்திரைபண்ணியங்கங்கேபடித்தவர்களோடுவாதித்துக்கொண்டுமிருப்பார்.

இதுவுமல்லாமல்- ஏழைபரதேசிகளுக்குமிகுந்த வுபகாரங்களுந்தானதருமங்களுஞ் செய்து- அந்தந்தக்கோயிற்றிருப்பணிகளுக்குவேண்டியவுபகாரங்கள்பண்ணிக்கொண்டும்- அநேகம்பிள்ளைகளுக்குப்பாஷைகளைக்கற்பித்து யோக்கியராக்கியவர்களுக்குத்தகுமான வுத்தியோகங்கள்கொடுப்பித்துக்கொண்டுமிருப்பார்

இப்படியிருக்கையில்- வீரமாமுனிவர்- முத்துச்சாமிக்கச்சிராயப்பாளையக்காரனுடையபருவாச்சேர்ந்த கோனாங்குப்பமென்ற ஆரியனூரிலொருகோயில்கட்டுவித்துப்பின்புமயிலாப்பூருக்குவந்து மேற்றிராணியாரைக்கண்டுபேசி வஸ்திராபரணமெல்லாந்தமிழ்ஸ்திரிரூபமாகவொருமாதாப்படமெழுதி அதைமனிலாவுக்கனு

ட்பி - ஒருஸ்திரியினுடையவுன்னதத்திற்கு மாதாசுரூபமும்-கையிலொருவருஷத்துப்பிள்ளைப் பிரமாணஞ்சேசுநாதர் சுரூபமுஞ் செய்வித்து அதை மயிலாப் பூருக்கழைப்பித்து அதற்குப்பெரியநாயகியம்மனெனப்பெயரிட்டு அதைமேற்படி பூருக்குக்கொண்டுபோய்த் திருவிழாச்செய்து அந்தஉற்சவத்திற்பதினைந்துபாடல்பாடிப்படிக்கச்சொல்லி அந்தமாதாவின்சுரூபத்தையக் கோயிலில்ஸ்தாபித்தார்.

மேலும்-அரியனூரசினிலையிட்டரங்கப்பமழவராயர் - மூன்றேலசாலிவாகனசகவருடம் ௲௬௱௫௰௭-ல் - ஏலாக்குறிச்சித்திருககாவலூரில் - சர்வேஸ்வரன்கோயிலுக்குச்சிலாசாதனம்பண்ணிக்கொடுத்திருந்ததிலத்திற்பிற்பாடு வீரமாமுனிவர் அடைக்கலநாயகித்திருநாமத்தாலொருகோயில்கட்டுவித்தார் - அந்தச்சாசனமாவது-ஸ்வஸ்தஸ்ரீ சாலிவாகனசகாப்தம்-௲௬௱௫௰௭-இராக்ஷத ௵ ஆடி௴-௨௰௬ ஸ்ரீமது-ராஜமானிய-ராஜஸ்ரீ அரியனூரசினிலையிட்டரங்கப்பமழவராயர் ஏலாக்குறிச்சித்திருக்காவலூரில் வீரானதேவன்வழிக்குக்கிழக்கு-கோவிலூர்வழிக்குமேற்குக்குட்டைக்குத்தெற்கு பெரியஏரிக்குவடக்குப்பட்டயாவுஞ்சர்வேஸ்வரன் கோயிலுக்குச்சிலாசாதனமாகத்தந்தோம் சந்திராதித்தருங்கல்லுங்காவிரியும்புல்லும்பூமியுமுள்ளளவுஞ்சுகமேயிருக்கவும்-இந்தத்தருமத்துக்குயாதாமொருத்தன்விகாதஞ்செய்தால்கங்கைக்கரையிலேகாராம்பசுவைக்கொன்றதோஷத்திற்போகக்கடவான்.

வீரமாமுனிவர் பாடலாய்ச்செய்த இசைத்தமிழ்ப் பிரபந்தங்களியாவையெனில்-முன்கோயிற்கட்டினஸ்தலமாகிய ஆரியனூர்பெயரைநாட்டியுலகத்திலவதரித்த இரக்ஷகருக்குக்கைத்தாதையாயிருந்து அவரைவளர்த்த-அர்-சூசையப்பரைக்குறித்துமூவாயிரத்தறுநூற்றுப் பதினைந்துபாடலுள்ளமுப்பத்தாறுபடலமாகவகுத்துத்தேம்பாவணியென்னும்வேதவிவரணகாப்பியத்தை.௲௭௱௨௬ம் - வருஷத்திற்பாடினார் - அதில் கவிகளின்திட்பத்தையுங்கருத்தினுட்பத்தையுங்கனவிததுவான்களுங் கண்டுணரமாட்டாமல்- அதற்கு உரையிடவேண்டுமென்று வீரமாமுனிவருக்கு விண்ணப்பம்பண்ணிக்கொண்டதின்மேல் - ௲௭௱௨௰௬-ம் - ஆண்டிலதற்குப்பதவுரையுமிட்டார்-அதிலேவேதாகமநியாயங்களைவிரித்துவிரோதசங்கைகளையறுத்து மெய்ஞ்ஞான போதங்களைவிளக்கி அஞ்ஞானமார்க்கங்களையகற்றி அநேகவிதசரிதைகளை யடக்கிச்சிறந்

தகட்டுளையாய்த்தெவிட்டாதமதுரமாய்த் தெளிந்தகருத்தாய்ச் செப்பரும்பொருளாய்ச்சகலஅலங்காரத்தோடுதொகுத்துப்பாடியிருக்கின்றார். அந்நியபாஷையிலிப்படிப் பாடத்தக்கவல்லவராரொன்றாச்சரியப்பட்டு ஆண்டவரளித்தவரப்பிரசாத ஏவலாலொருவர் செய்யத்தகுவதொழிய வேறல்லவென்று கண்டவர் வியந்து மகிழ்ந்துபுகழ்வதுமன்றி அப்பெருங்காப்பியத்தைப் படித்துங் கேட்டுமுணர்ந்தோர்கடவுளளித்த மெய்ம்மறைதெளிந்து அறவழிநடந்து கசடெலாங்கடந்துகதிபெற்றுவாழ்வர்.

வீரமாமுனிவர்பாடியபெருங்காப்பியத்தைக் கண்டு வியந்த வித்துவான்களும்அவருடையமாணாக்கர்களும்அவர்பாடியபிரபந்தங்களுக்குக்குருவணக்கஞ்சொல்லவேண்டுமென்றுவிரும்பியவரானுமதிப்படி அந்நாள்வரைக்கும் அவருக்குவழங்கிவந்ததைரியநாதசுவாமியென்கிற பெயரில், தைரியத்துக்கு- வீரமென்றும்- காமாதிகளைமுனிந்துவென்றவராதலால்முனிவரென்றும்-மா- என்பதுபெருமையைக்குறித்த அடைமொழியாக முனிவரென்பதோடு கூட்டிவீரமாமுனிவரெனக்காரணப்பெயரமைத்து வணக்கங்கூறலாயினார்- இதன்பின்பு - வீரமாமுனிவரானவர்- இரண்டாவதுகட்டினதிருக்காவலூரிலெழுந்தருளியிருக்கும் அடைக்கலநாயகியைக்குறித்துத்தேர்ந்தஅலங்காரமாய்த்திவ்வியமானபேரின்பமாய்த் திருக்காவலூர்கலம்பகமும்- அடைக்கலமாலையும்- கலிவெண்பாவும்- இம்மூன்றுபிரபந்தமும்பாடினார்.

பின்னையும்- போர்த்துகீசுதேசத்திற்பிறந்துவேதசாட்சியான- அர்- இத்தேரியம்மாளைக்குறித்து அந்தஅரியதிருக்கன்னியின் சரித்திரத்தைப்பத்துறுப்பாகப்பிரித்து ஆயிரத்தொருநூறுதொடையாகப்பாடினார் - அதுவெள்ளுளையாயினுஞ்சித்திரவலங்காரமுஞ்சிறந்தமதுரமுந்திளைப்பத்தோன்றும்.

மேலும்- ஆண்டவருடைய அரியதிருப்பாடுகளின்மேல் அவரைக்கன்னிமைகுன்றாது அற்புதமாயீன்ற அமலோற்பவியான- அர்ச்சியஷிஷ்டமரியாயிபிரலாபித்ததைக் குறித்து அன்னையழுங்கலந்தாதியும்- அநேகங்கீர்த்தனைகளும்- வண்ணங்களும், தேவாரங்களும் பாடினார்- மிகவுந்தேர்ந்தவித்துவான்கள்தாமேவீரமாமுனிவர் பாடிய இசைத்தமிழ்ப்பிரபந்தங்களின் கட்டுளையலங்காரத்தையுங்கருத்தினுட்பத்தையுங்கண்டுசிரமேற்கொண்டுகளித்துப்புகழ்கின்றார்கள்.

அவரிடத்திலெப்போதுமைந்துகற்றுச்சொல்லிகளிருந்து அவர் பாடும்பாட்டினாலடியை நாலுபேர் நாலேட்டிலெழுத அவற்றைச்சேர்த்தொருவன் புத்தகத்திற்பதியச்செய்வான் - ஏனெனில் - அவர் பாடுகிறவிரைவுக்குத்தக்கதா யொருவனேயெழுதக் கூடாததினால்-சொன்னவோரடியைக்கேட்டவனெழுதுமுன் அவருக்குத்தோன்றுமிரண்டாமடியைமற்றொருவனுக்கும்மூன்றாமடி நான்காமடியையும் அவ்வண்ணமேவெவ்வேறுபெயர்க்குஞ் சொல்லியெழுதுவிப்பார்- இப்படிபாடுகிறவிரைவு-இராக்காலங்களிலவர் நித்திரைசெய்யுமுன்னினைத்துச் சொல்லும்பொழுது முக்கியமாய்நடந்துவரும்.

இவையுமன்றி.வீரமாமுனிவர்செய்தஇயற்றமிழ்ப்பிரபந்தங்களியாவையெனில்- அவர்குருக்களிடமாயிருந்துவேதோபதேசஞ் சொல்ல அனுப்பப்படுமுபதேசிகளாவ்வேதியர் தொழிலினுடைய இயல்பும் - மாட்சிமுதலியதன்மைகளுந்தெரிந்து பிறரையுங்கதியேற்றித்தாங்களுங் கரையேறும்படி வேதப்பிரமாணங்களைநாட்டி அவைவிளங்கத்தக்கஉபமான நியாயங்களைக்கூட்டி யவரவருக்கு வேண்டினநல்லொழுக்கம் பலவையுங்காட்டிக் கற்பனையலங்காரமாய்க்கருத்தின் கூர்மையாய்ப்பொருந்தத்தீட்டி இருபததிகாரங்களாகப்பூட்டி- துளாஉயன ம் - ௵, வேதியரொழுக்கமென்றொருவேதவிவரணசாஸ்திரமெழுதினர்.

மக்கட்காதிகாரணமுமவதியுமுன்னர்க்கூறி பாவத்தன்மையினையும் - இடம் - காலம்- செயல்முதலியவற்றைப்பற்றிப்பாவமெய்தும் பலவகையினையும், பாவவிஷத்தையுமதனால் வருந்தீங்கினையும் பின்னர்க்கூறி-மக்களெவர்க்கும் பொய்யாதெய்தும்-சாவு - தீர்வை-நரகம்-மோக்ஷமென்னும் இந்நான்கின்றன்மையினையும் நாலுவகையாய்விளங்கக்காட்டிஅவ்வருஷத்திற்றானேஞானவுணர்த்தலென்றொருஞானநூலெழுதினர் - அதில் - சாவைப்பேசும்பொழுது அதனியல்பு-நிச்சயம்-உபத்திரவமிவற்றையும் - தீர்வையைப்பேசும்பொழுது-அகோரம் வரும்வழிமுதலியவற்றையும்- நரகத்தைப்பேசும்பொழுது-அதனியல்பு-இருள்-பூதி-நோய்-யாதனைமுதலியவற்றையும - மோக்ஷத்தைப்பேசும் பொழுதுஅதனீர்மை-சிறப்பு-ஒளிமை - இன்பமுதலியவற்றையுங்கண்முன்வைத்துக்காட்டினாற்போல-அதனதனுரிமைவிளங்க அற்புதப்பிரசங்கமாயலங்கரித்துரைக்கின்றார்.

தரங்கன்பாடியார் முழுதப்பிதமாய்த்தாங்கள்தமிழில் திருப்பினவொருசுவிசேஷத்தை யொருகெட்டிக்காரன்கையிற் கொடுத்துவீரமாமுனிவரிருக்குமூரிற்போயுபதேசம்பண்ணித்தங்கள்மதத்தைதப்பிரபலம்பண்ண அவனையனுப்பினார்கள். அவனுமங்கங்கேதிரிந்து வீரமாமுனிவரிருக்கு மூரிலும்வந்துசிலமனிதரைத்திருப்பப்பிரயாசப்படுவதைக்கண்ட சிலகற்றோர் வீரமாமுனிவரிடத்துச்சென்று விண்ணப்பஞ்செய்துகொண்டதின்மேல் - வச்சிரமணியானமெய்வேகத்துறன்றோன்றும் வளையற்கல்களாகிய புறச்சமயங்களையின்னவென்றுகாட்டுவோமென்றும் - மெய்வேதக்குணமின்னதெனவிளக்கியபின்பு தரங்கன்பாடியார்சமயம்வந்த காரணவகையையும், அவர்கள்போதனையையும், அவர்கள்தமிழில் திருப்பிவைத்திருந்த சுவிசேஷத்தின் தப்பிதங்களையு மின்னவையென்று வேதவுதாரணங்களாலும், மெய்யானநியாயங்களாலுந்தெளிவாய்க்காட்டி - ௲௭௱௨௰௮ . ம் (வரு), வேதவிளக்கமென்றொருபுத்தகம் பதினெட்டதிகாரமாகவெழுதித்தரங்கன்பாடியாருக்கனுப்பி, அந்த வேதவிளக்கத்திலுள்ள விஷயங்களைக்குறித்துத் தரங்கன்பாடியார் ஆக்ஷேபிக்கிறதா யிருந்தாலதற்குத்தகுதியான சமாதானங்கொடுப்போமென்று தரங்கன்பாடியையடுத்த திருக்கடையூரில் வந்துவீரமாமுனிவர் - எட்டுநாள்வரைக்குங்காத்திருந்தும், அதைக்குறித்தொருவரும் பேசவாராததைக்கண்டு மறுபடியுந்தாமிருக்கிறஸ்தலத்துக்குப்போய்விட்டார் - அவர்களிதைமறக்கமாட்டாமலநேகநாளைக்குப்பின்பு - கத்தோலிகுவேதத்தின்மேற்புருவத்திலொருவன் பொர்த்துகீசுபாஷையிலெழுதினதிருச்சபைபேதகமென்னும் வேறொருசிறியபுத்தகத்தைத் தமிழிலெழுதி வீரமாமுனிவருக்கனுப்பினார்கள் - அவரதைப்பரிசோதித்து அதிலிருந்த எழுபத்தெட்டுப்பொய்களையுந்தப்பிதங்களையு மெய்யான நியாயப்பிரமாணங்களைக் கொண்டெடுத்துக் காட்டிப் பேதகமறுத்தலென்றொரு புத்தகமெழுதிமீளவுந் தரங்கன்பாடியாருக் கனுப்பினார் - அக்காலத்தில் அதன்மேலவர்க ளொன்றுஞ் செய்ததைக் காணோம்.

வீரமாமுனிவர்மேற்சொன்னவேதவிவரணப்பிரபந்தங்களெல்லா முக்கியமாயிந்துக்கிறிஸ்தவர்களுக் குபயோகமாகச்செய்ததுமல்லாமல் இந்துக்களுக்கெல்லாம் பொதுப்பிரயோசன மாய்த்தமிழ்ப்பாஷைக்குவேண்டிய மகாதெளிவான இலக்கணமும்,

அகராதியுஞ்செய்தார்- அதெப்படியெனில்- தமிழிலே முன்னோர் செய்த இலக்கணநூலெல்லாஞ் செந்தமிழ்மொழிகளிற் சிறப்பித்தெழுதியிருக்கின்றமையால் தமிழிலக்கணத்தைப் படிப்பவரரிதாயிருக்கிறதென்பதையும் - படிப்பவர்களுக்குள்ள பிரயாசத்தையும் வீரமாமுனிவர்கண்டு அதையாவரும் விரும்பியெளிதாய்ப் படிக்கும்பொருட்டுஞ் செந்தமிழ் மொழியிலிருந்தவிலக்கணத்தை ௲௭௱௩௰-ம்-௵ இளந்தமிழாயெழுதி அதற்குத்தொன்னூல்விளக்கமென்றுபெயரிட்டார் - ஆதலிப்படியிளந்தமிழிலெழுதினதுமுன்னோர்தந்த நூற்களுக்கிது அதிகமாய்விரிந்துபோகாமலுஞ்சுருங்கிக்குறைந்துபோகாமலும் -பின்னறியத்தக்கதுகளை நீக்கியும்-முன்னறியத்தக்கதுகளைக்கூட்டியும்முக்கியமாய்வேண்டின விதிகளெல்லாமுழுமையுந்தெளிவாய்விளக்கிததேர்ந்த நூலாகமுடித்தார். அது தமிழ்க்கடலை நீந்திப்பெரும்பயனாகிய ஒளிமணிகளை யெடுத்தணியும் படிகையிற்றந்தசிறந்த இலக்கணததெப்பமாகத்தோன்றிவிளங்குகின்றதாமே.

தமிழ்ப்பாஷைக்கிந்நாட்டிலேமுற்காலத்தில்தெளிவான அகராதியின்றிப்பலவிதபாடலாகவுஞ் சூத்திரங்களாகவு முள்ளநிகண்டுதிவாகரங்கள்மாத்திரமேயிருந்தன - வீரமாமுனிவரதுகளையெல்லாஞ்சேர்த்து இரோப்பியருடைய அகராதிகளைப்பார்க்க அதிகதெளிவான அகராதியொன்று ௲௭௱௩௰௨-ம்-௵-செந்தமிழுக்குச்செய்தார்-அதெப்படியெனில்-ஒருபெயருக்குப்பலபொருளிருக்கிறதெல்லாம்,முதலாவதுபெயரகராதியென்றும்- ஒருபொருளுக்குப் பலபெயரிருக்கிறதெல்லாம் இரண்டாவதுபொருளகராதியென்றும- இரண்டுமுதலநேகஞ்சேர்த்தொருசொல்லாகவழங்குவதெல்லாம்-மூன்றாவதுதொகையகராதியென்றும் - ககரமுதல்-னகரவீறாகவுள்ளபதினெட்டெழுத்தும்-குறிலும் - நெடிலுமாயெதுகைபற்றிவருந்தமிழ்ப் பதங்களெல்லா மடுக்கிநான்காவதுதொடையகராதியென்றும் வகுத்து- இந்நான்கிற்கும் பொதுநாமமாகச் சதுரகராதியென்றுபெயரிட்டுச் செறிந்தகாடுகளுக்குச் சமானமாய்த்தமிழ்ப்பாஷையிலிருந்த- திவாகரநிகண்டுகளைச்சிறந்தசிங்காரத்தோட்டம்போலத்திருந்தத்தோன்றும்படிக்குத்தெளிவாகச்செய்தார்.

வாக்கியசித்தாந்தமிவற்றின்வகையைவிளக்கி - நிதிக்கணிதமென்றும்-திதிக்கணிதமென்று மிருவகுப்பாகவும்-இவற்றினுட்பிரிவு

ள்ளபலவகுப்பாகவும் வகுத்து - திருச்சபைக்கணிதமென்றொரு சோதிடநூல்செய்தார்-மேலும் வாதம்-வைத்தியமிவற்றிற்குவேண்டுஞ்சிலவளமான நூற்களைச்செய்தாரொன்று கேள்வியாயினுங் கிடைக்கவில்லை.

இந்துக்களுக்குப்பொதுப்பிரயோசனமாகச்செய்த மேற்சொன்னநூற்களன்றி-இரோப்பியருக்கும்- விசேஷமாயிரோப்பிலிருந்துவருங் குருக்களுக்கும் பொதுநலமாகவும்- செந்தமிழென்றும் கொடுந்தமிழென்றுமிருவகையாய் வழங்குந் தமிழ்ப்பாஷையையவர்க ளெளிதாய்க்கற்கும்படி இருவகை இலக்கணங்களும் அகராதிகளும் - லத்தீன்பாஷையில் மொழிபெயர்த்து ஏராளமாயெழுதிப்பரப்பினார்-அஃதெப்படியெனில்- இலக்கணமில்லாதாயினுங்கற்றோர்களாலுங் கல்லாதவர்களாலுஞ் சாதாரணமாய்வழங்கப்படுங்கொடுந்தமிழுக்கு இலக்கணங்கற்பித்து அதை- ௲௭௱௨௰௮-ம்-௵, லத்தீன்பாஷாந்தரம்பண்ணி- ௲௭௱௩௰௮-ம் ௵ தரங்கன்பாடியில்அச்சிற்பதிப்பித்தார்-மீளவும்- ௲௭௱௩௰ - ம்-௵, செந்தமிழுக்கு -எழுத்துச்சொல்-யாப்பு-இம்மூன்றையுஞ்சேர்த்து அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் - அதற்குப்பின்பு-அவர் தமிழிலுண்டுபண்ணின ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தை லத்தீன்பாஷையில் விவரணம்பண்ணினமொழிபெயர்ப்பும்-கொடுந்தமிழுக்கும்-லத்தீனுக்கும்-அகராதியும்-போர்த்துகீசுபாஷையையும்-லத்தீன்பாஷையையுஞ்சேர்த்துத்தமிழிலேமொழிபெயர்த்தமற்றோரகராதியும் - கொடுந்தமிழ்வாசிப்பவர்க்குப் பரமார்த்த குருக்கதையும்-அதற்கு லத்தீன்மொழி பெயர்ப்பும் செந்தமிழ்வாசிப்பவர்க்கு வாமன்சரித்திரமும் - அதற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும் - வாக்கியசித்தாந்த கணிதத்திற்கு லத்தீன் மொழிபெயர்ப்பும்-தெலுங்குபாஷைக்கு லத்தீனிலேவியாகரணமுஞ்செய்தார்.

இவையல்லாமல்-திருவள்ளுவர்குறளை-லத்தீன்பாஷையிலேமொழிபெயர்த்துவியாகியானம்பண்ணினார்.அந்தநூல்சென்னைக்கல்விச்சங்கத்துக்கின்னங்கிடைக்கவில்லை - மேலுமவர்செய்ததாய்க் கேள்விப்படுக்கிடையாமலிருக்கிறநூற்களின்னஞ்சிலவுளவாம்.

இதற்குககாரணமென்னவெனில்- உலகத்திலுள்ளசகலசீவப்பொருட்களுக்கும் பாலாகச்சுரந்துபொழிந்து அவைகளைவளர்க்கின்றம்மகமானது ஒரோரிடத்திடித்துச் சிலசேதங்களை வருவித்

தானுமதைக்குறித்து அம்மனமுமேகத்தைப்பகைத்து அதுவுலக
த்துக்கெல்லாமாகாதென்பாரொருவருமில்லையே-அப்படியிருக்க
ஓரிடத்துலாயினுஞ் சேதமுண்டாக்காமலுலகத்திலுள்ள எண்ணிற
ந்தமன்னுயிர்களுக்கிரங்கி ஞானமிர்தம் பொழிந்தூட்டியவைக
ளைக்காப்பாற்றிமேற்கதிபெறத்தக்கநன்னெறியில் வளர்த்துக்கொ
ண்டுவந்தசேசுசபையைப்பகைத்து அதுவுலகத்துக்கெல்லாமாகா
தென்னலாமோ-நோயுள்ளகண்ணோர்தங்களுக்குப்பகையானசூரி
யப்பிரபைமற்றையாவர்க்குமாகாதென்றதைவிலக்கவேணுமென்
றதுபோல-அரசராயினும்அறவழிதப்பினலஞ்சாமலவரைக்கடிந்
திடித்துப்புத்திசொல்லுமரியமெய்ஞ்ஞானக் குருத்துவநெறியை
மேற்கொண்டசேசுசபையவ்வரசர்க்காகாதமையா லதைவிரோதித்
து அதுவுலகத்துக்கெல்லாமாகாதென்றவர்கள்-அர்.பாப்புவினிட
த்தில்முறையிட்டுக்கொண்டு அதையெடுத்துப்போடக்காரணமா
யினார்கள்-ஆனாலச்சபையெந்நாளுமெவ்விடத்து மிருக்கவேண்டு
மென்று-அர்-பாப்புவுக்குச்சித்தமாயிருந்தாலும்-மேற்சொல்லி
யவரசராலிரோப்புதேசங்களிலதிக கலகம்வராமலிருக்கஅவர்கள்
கேட்டமனுவின்படி சேசுசபையையெடுத்துப்போடக் கட்டாய
மாயுடன்பட்டார்- வேதாகமங்களெல்லாம் ஓதியுணர்ந்துமெய்ஞ்
ஞானநூற்களெவையும் விளங்கத்தெளிந்து பாலசந்நியாசம் பண்
ணி பரமகதியின்பாக்கியமே யெண்ணித்தங்களுடுக்கான உடை
களைவிடுத்து இத்தரித்திரநாட்டிற்சேற்றதவவேடந்தொடுத்துமே
லானவினியவூண்களைமறுத்து மிருதுவானதங்கள்தேகங்களையொ
றுத்துக்கானலடர்ந்தஇந்நாடெலாந்திரிந்து கதிதரும்வேதநலங்
களைச்சொரிந்து அந்தகாரமாகிய அஞ்ஞானத்தால் மூடப்பட்ட
இந்நாட்டிலேசூரியப்பிரபையாகிய மெய்வேதநூற்களை யளவில்
லாமலெழுதிப்பரப்பி யிந்நாட்டைவிளக்கிக்கொண்டிருந்த நிகரி
ல்லாத அரியசேசுசபை இரோப்புதேசத்தி லெடுபட்ட அநேக
வருஷகாலமாயிந்நாட்டிற்குஅச்சபைகுருக்களின்வருகையற்று
ப்போனதினாலே மேற்சொல்லிய வேதவிவரணப்பிரபந்தங்களா
கியதடாகங்களும்வற்றிக கல்விசாஸ்திர நூற்களாகியசலச்சூத்திரக்
கால்களுந்தூர்ந்துபோயின-ஆதலாலருமைதெரிந்தவற்றைமுக்கி
யமாய்க்காப்பாற்றுகின்ற சேசுசபைஇந்நாட்டி லில்லாமையால்
தத்துவபோதகசுவாமி முதலானபலகுருக்களா லுண்டுபண்ணப்ப
ட்ட எண்ணிறந்தநூற்களிலங்கங்குசிலநூற்களழிந்துஞ் சிதைந்து

ம் - எங்கெங்குஞ்சில நூற்கள்சிதறியும்பாரந்தும் போயினமையா
லிந்நாளிலவையோரிடத்தொருப்பட அகப்படற்கரியவாயின.

வீரமாமுனிவர் - அதற்குமேல் - திருச்சிராப்பள்ளிக்கு நபாபா
யிருந்த சந்தா சாயபைத்தாஞ்சந்தித்துப் பேசவேண்டுமென்று
பார்சும் - இந்துஸ்தானியும் - மூன்றுமாதத்திற்குள்ளாகப்படித்துப்
பின்பு சந்தாசாயபைக்கண்டுபேசும்பொழுது சந்தாசாயபு - இவ
ரையற்புதமான புத்திமானென்று நிச்சயித்திவர்மேலதிகப்பிரியா
கியிவருக்கு - இஸ்மத்சந்நியாசியென்று பெயரிட்டுத் தன்பாட்டன்
சாத்துல்கான் ஏறின தந்தப்பல்லக்கைக் கொடுத்தான் - இஸ்மத் -
என்பது - அரபியா பாஷையில் குற்றங்களைக்கடிந்திருக்கிற - பழுதற்
ற - என்றுபயபொருளும். மேலுமிவர்செலவுக்குக் கொள்ளடத்துக்கு வட
க்கு - திருச்சிராப்பள்ளிச்சீமையைச்சேர்ந்த. உக்கரனூர் - மால்வாய்
அரசூர் - நல்லூர் - வருஷத்திற்கு ௰௨௲ரூபாயெடுக்குமிந்நான்கு
கிராமங்களையுஞ்சர்வமானியமாகப்பண்ணி - இவரைத்தன்னிடத்தி
ல் திவானாயிருக்கமிகவும்பிரார்த்தித்து - திவானுத்தியோகங்கொ
டுத்துவைத்துக்கொண்டார். இப்படிக்கவர்திவானாகவிருக்கையில்
வெளியேசாரிபுறப்பட்டால்இத்தேசத்துப்பிரதான இந்துக்குரு
க்களுக்குநடந்துவருகிறசிறப்பைப்போலஇந்துக்கிறிஸ்தவர்களு
டையகுருவாகியவீரமாமுனிவருக்குஇந்நாட்டுவழக்கம்பற்றிமேற்
சொன்ன எப்போதுமுள்ள சிறப்புகளோடுகூட - பீதாம்பரத்தாற்
செய்த பன்னிரண்டு குமரவாணக்கொடியும் - நாலு வெள்ளித்தடி
க்காரரும் - முப்பது குதிரைமேற்சேவகரும் - குதிரைமேல் டங்கா
வும் - நாகசுரமும் - இவரேறுகிறவொருவெள்ளைக்குதிரையும் - ஒரு
கறுப்புக்குதிரையும் - சேணமுதலியசிங்காரிப்போடுமுன்னேநட
க்க - அர்க்கார் - டலாயித்துகள்முன்னோட பின்னாலேயொட்ட
கத்தின்மேல் நகராவும் - ஒட்டகத்தின்மேல கைத்தாளமுழு
க்கிக்கொண்டு - மற்றொட்டையின்மேல் பூசைபண்ணுகிறதற்
குவேண்டியவஸ்திரபாத்திரமுதலாகியவஸ்துக்களும் - மூன்றொட்
டையின்மேற்கூடாரங்களும் மற்றைச்சாமான்களும் வருமபடி
போவார் - இவரிறங்குகிறவிடங்களிலும் - நபாபுகசம்சேரியிலும்புலி
த்தோலாசனத்தின்மேலுட்காந்திருப்பார்.

இப்படியேலௌகீகசம்பந்தமான திவானுத்தியோகத்தைப்
பார்த்துக்கொண்டுவந்தாலும் - தமிழ்க்கலைஞானஆராய்ச்சியிலு
ம் - கவிபாடுந்திறமையிலுங் கனமுயற்சியுள்ளவரா யிருந்தாலும்.

வைதிகசம்பந்தமான அவர்சுயத்தொழிலாகியகுருத்துவநெறியில் மேன்மேலுமதிகரித்து அதைநிறைவேற்றிக்கொண்டும் வருவார்- இதுவுமன்றி, அவர்புறசமயத்தாருடனே தர்க்கவாதம்பண்ணியவர்களைகிறிஸ்துவேதத்திற்சேர்த்துக்கொண்டுவருவார் - சாஸ்திர காவியங்களிலே குறள் நாலடி - சிந்தாமணி - கம்பராமாயணமிவற்றைப்பரிசோதித்து அவைகளிலமிகுந்த சந்தோஷமடைந்து வருவார்- பின்னுமவரிடத்திலநேகவித்துவான்கள்தங்களிற்கூடியமட்டுமவரைச்சோதித்து அவர்கள்சோதிப்புக்கவரகப்படாமையைக்கண்டுபோய்விடுவார்கள்.

இப்படிநடந்துவருங்காலத்தில் நன்குகற்றறிந்தஇரண்டு பண்டாரங்கள் வாயினாற்பேசியாவதில்லையென்றியோசித்துக்கையினாற்பேசுஞ்சாடைகாண்பித்திவரைச்செயிக்கவேண்டுமென்றிவரிடத்திற்குவந்து உபசாரமுறைமைகள்செய்துகொண்டபின்னுமுடன்வாயினாற்பேசவேண்டியதுகளைக் கைச்சாடையாற் பேசவேண்டுமென்ன - இவருஞ்சம்மதித்தென்னபேசவேண்டுமென்று கைச்சாடையிற்கேட்க - அவ்விருவருமிரண்டுவிரலைக் காண்பித்தால்நாமிருவர்வந்தோமென்று நினைப்பாரதினாலே மோடனுஞ்செய்யலாமென்று நினைத்து அவ்விருவரிலொருவனிருவிரலைநீட்டிக்காட்ட அப்பொழுதிவர் அர்த்தம்பண்ணிக்கொண்டதாவது - வானம் - பூமி - சந்திரன் - சூரியன் - ஆண் - பெண் - தாய் - தந்தை - மோக்ஷம் - நரகம் - மெய்க்குரு - பொய்க்குரு - நல்வினை - தீவினை பாவம் - புண்ணியம் - மித்துரு சத்துரு - அழுதல் - சிரித்தல் - சாவு - வாழ்வு - தூங்கல் - விழித்தல் - மூடல் - திறத்தல - இப்படிக்கிரண்டிரண்டாகுமபேதங்களைநினைத்துத்தமதொருவிரலைநீட்டிக் காட்டிக்கையோடுகையறைந்தார்- அவர்களதைக்கண்டுகலங்கிப் பூலோகபரலோகத்தையும் - சப்தசாகரத்தையும் - தாபரசங்கம - பூதியமுதலானதுகளையும்படைத்தளித்தவொருவனைத்தெளிந்துகையோடுகையறைந்துகாட்டியவிவரந்தெரியாமல் மயங்கிநியாயந்தெரியசெய்யவேண்டுமெனவாயினாலேபேசக்கூடாதென்று வந்தவிரதத்திற்குவிரோதமாயிவரைகேட்கச் சகலத்தையுமுண்டு பண்ணினவனொருவர்தவிர மற்றதுகளெல்லாம் பொய்வாழ்வெனச்சொல்லக்கேட்டுமறுமொழிபேசாமற்போய்விட்டார்கள்.

இதன்பின்பு - கல்விப்பெருக்கத்தாலகங்கரித்தஒன்பதுசடைப்பண்டாரங்கள்வந்து வீரமாமுனிவரோடு தர்க்கம் பண்ணியவரை

வெல்லவேண்டுமென்று கருதித் தோற்றவர்கள் வெற்றிபெற்றவர்க
ள் சொற்படி நடப்பதென்று உடன்படிக்கை பண்ணிக்கொண்டு தர்
க்கிக்கத்தலைப்பட்டார்கள் - ஒருமாதமட்டும் பண்ணின தர்க்கத்தி
லவரை வெல்லமாட்டாமல் தாங்களே தோர்த்தபடியாலவரில் ஆறு
பேர் சத்தியவேதத்திற்கூட்பட்டார்கள் - மூன்றுபேர் சடைகளறு
பட்டு வெட்கத்தினால் மேல்சீமைக்குப்போய்விட்டார்கள் - அந்தச்
சடைகள் திருககாவலூர் கோயில் மண்டபத்தில் வைக்கோற்கட்டுப்
போல ஐநர்கலாபனைமட்டுந் தொங்கிக்கிடந்தன.

இப்படிக்கிவர் தேசசஞ்சாரம் பண்ணிக்கொண்டு போகிற
போது சிவக்ஷேத்திரமாகிய வைத்தீஸ்வரன்கோயிலென்னு மூரில்
வந்திறங்கியிருந்து சீஷர்கள் கற்றுச்சொல்லிகளுடனே வெளியேயு
லாத்தப்புறப்பட்டு வினைதீர்த்தான்கோயி லருகாமையில் வருகிற
போதந்தக்கோயிலில் வெகு ஆடம்பரமாயிருப்பதைக்கண்டு அந்
தக்கோயிலுக்கு வந்திருந்தவர்களிற் சிலயோகியர்களைக்கண்டிஃ
தென்ன கோயிலென்றார் - அவர்களிது வினைதீர்த்தான்கோயில் - கூ
ன் - குருடர் - முடவர் முதலிய பிணியாளர்கள் வந்துவணங்கி வழிப
ட்டாலந்த வினைகளெல்லாஞ் சூரியனைக்கண்ட இருள்போல நீங்கு
மென்றுறுதியாகச் சொன்னார்கள் - அதற்கிவர் சொன்ன மறுமொழி
யாவது:

(வெண்பா.)

வாதக்காலாந்தமக்குமைத்துனற்கு நீரிழிவா - ம்
போதப்பெருவயிறும்புத்திரற்கு - யாதனாயி - ல்
வந்தவினை தீர்க்கமருந்தறியான் வேளூரா - ன்
ஏந்தவினை தீர்த்தானிவ - - - ன்.

(இதன்பொருள்.)

வேளூரானாகிய வைத்தியநாதசுவாமியானவற்கொருகால் வாதமா
ம் - தன்றுமைத்துனனாகிய விஷ்ணுவிற்கு நீரிழிவாம் - தனதுபிள்ளை
க்கு மிகவும் பெருவயிறாம் - இப்படித்தங்களுக்கு வந்தவியாதியைப்
போக்க அவுஷதந் தெரியாதவன் பூலோகத்திலெந்தவினை தீர்த்தா
னென்றவாறு.

வாதக்காலென்றது - காளியுடன் வாதிட்டாடினபோதொருகா
லைத்தூக்கியாடினாராகையால் வாதக்காலெனவும் - விஷ்ணுவிற்குப்
பாதத்திற்கங்கையுற்பத்தியாதலால் நீரிழிவென்றும் - புத்திரற்கு
இயல்பாகவே பெருங்காத்திரமாகையாற்பெருவயிறெனவுஞ்சாது

ரியமாகப்பிரசங்கம்பண்ணுகையிற் கேட்டிருந்தவர்களெல்லா
ந்திகைத்துநின்றிவரைச்சந்தோஷித்தார்கள். அவருபதேசமகிமை
யினாலிந்தத்தேசஸ்தர்களிற்பலபேர் கிறிஸ்தவர்களானார்கள்.

உன்னைக்காத்தலும்பிறரையுணர்த்தலுஞ்செய்து வீடுபெற்
றாய்வாயென்று அர்-சின்னப்பரருளிச்செய்த வேதவசனத்துக்கு
முழுதுமுடன்பட்டுவிளங்கினகாரணக்குருவாகியவீரமாமுனிவர்-
தமதாத்மாவையும் பிறரான்மாக்களையும்-உலகுடல்பசாசென்னு
ம் அலைகடலினின்றுங்கரையேற்றும்பொருட்டு அல்லும்பகலுமரி
யபிரயாசைகளையனுபவித்துச் சர்வேஸ்வரனுடையவேதத்தைப்
பிரசங்கப்பண்ணிப்போதித்துக்கொண்டிருந்தார்.

முடிவிலிவர்சந்தாசாயபுக்குத் திவானாகத்திருச்சிராப்பள்ளி
யிலிருக்கையில்-௲௭௱௪௰-ம்-வருஷத்தில்-நாதர்சிங்குபாளையம்-
திருச்சிராப்பள்ளியில்வந்துமுற்றிக்கைப்போட்டுக்கொண் டிருந்
துதிருச்சிராப்பள்ளியைப்பிடித்துக்கொள்ள எத்தனமாயிருக்கிற
போதிவர் வெளிப்பட்டுஉலாந்தக்காரருடையகாயல்பட்டணத்திற்
கடுத்தமணற்பாடென்னுமூருக்குப்போயங்குள்ள சேசுசபைமட
த்திலவரந்தியமட்டுமிருந்தவிரண்டுவருஷகாலமுமுதிர்ந்தவயதின
ராயினும்உயர்ந்தமனமுயற்சியோ டங்கே வேதோபதேசம்பண்
ணிக்கொண்டும்-தாம்பாடியபெருங்காப்பியமுதலானவற்றைப்பி
ரசங்கித்துக்கொண்டுமிருந்தார்-இந்தியாவில்வந்தநேகம்பிரசை
களைப்பரலோகஇன்பவெள்ளத்திற்றிளைந்துவிளையாடும்படி ஆற்றற்
கரியமுயற்சித்துன்பவெள்ளத்திலுலைந்துவருந்திய சீவகாருண்ணி
யராகியவீரமாமுனிவரால்அப்பரலோகத்தையலங்கரிக்க - ௲௭
௱௪௰௭ம்-ஆண்டு-ஆண்டவற்குத்திருவுளமாயிற்று.

வீரமாமுனிவர்சரித்திரமுற்றிற்று.

## வீரமாமுனிவர்சரிதைப்

### புறநடை.

கடவுள்திருஅவதாரமாயினபின்புகடவுளுடையபிரதான
சிஷ்யர்களிலொருவராகிய-அர்-தோமையாரென்னுமாதவரிஷியா
னவர்ஆதிகாலத்திலிந்த நமதுஆசியகண்டத்திற்குட்பட்ட இச்சிந்
துராச்சியத்திற்குவந்து சத்தியவேதவிசுவாசவித்தானதை யூன்

திருவுளப்பிரசித்த ஆண்டு-௬௰௪ - இரோப்புக்கண்டத்திலும் பிரசங்கரு டையசீஷர்கள்சென்று வேதவிசுவாசவித்தானதைவிதைக்க-அது அங்கங்கேமுளைக்கப்பட்டு வளரத்தொடங்குகையில் வளரவொட் டாமலழித்த அஞ்ஞானதுர்மதச் சக்கிரவர்த்திக ளிருந்திராச்சிய பரிபாலனம்பண்ணின இரோமாபுரிதானே மேற்சொல்லியவேதத் துக்குத்தலையிடமாக மெய்ஞ்ஞானத் திருதேசிகரிருந்து வேதப் பரிபாலனம்பண்ணும்படி கடவுளுக்குத் திருவுளமாயின ஆண்டு- ௱௬௰௪ - அவ்வேதவிசுவாசவித்தானதுஞ் செபயிராகியோங்கிவளர்ந் து நிலைபெற்றவிருக்ஷமாகப்படர்ந்தபின்பு மற்றஇரோப்பியருக் கு முந்திப் போர்த்துகீசுக்காரர் ஆதியிலிந்தநாட்டுக்குவந்தவருஷம் ௲௪௱௯௰௮ - மேற்சொல்லிய இரோமைநகரத்திற் சத்தியவேதத் திருச்சபைக்குத்தலைமைபெற்றுவீற்றிருக்குந் திவ்வியபீடாதிப தியாகிய-அர்-பாப்பானவர்கற்பித்தபிரகாரஞ் சேசுசபைக்குருவாகி ய-அர்-சவேரியாரென்னுந் திருத்தவமுனிவரானவர் இந்நாட்டுக் கெழுந்தருளிவந்தவருஷம் ௲௫௱௪௰௨ - இதன்பின்பு இரோமை ப்பிராமணனென்னும் தத்துவபோதகசுவாமியிந்தத்தேசங்களுக் கெழுந்தருளிவந்தவருஷம் ௲௬௱௬ - அவரிங்கே ௫௰ வருஷகா லமிருந்தபடியாலவர்பரகதியடைந்திருந்த ௲௬௱௫௰௬-ம்-வருஷ மட்டாக - ௲௫௱௫௰- வருஷமாயிற்று - ஆதலாலாதியிலேயிந்நாட் டில்வேதமுபதேசிக்கப்பட்டு - ௲௫௱ - வருஷமாயினபின்பு இரோப்பியரிந்தத்தேசங்களுக்குவந்தார்கள். இரோப்பியரிங்கே வந்து-௲௨௱௫௰-வருஷமாயிற்று-வீரமாமுனிவர்வந்து - ௱௫௰ ஆண்டாயினதெனக்காண்க- இதிலேயறியத்தக்கமுக்கியமான சில விசேஷவிவரணமுண்டாம்-அஃதென்னவெனில் இந்நாட்டிலுள் ள இந்துக்களிலும்- இரோப்பியரிலுஞ்சிலர் ஆராய்ந்தறியாததினு லிங்குள்ளஇந்துக்கிறிஸ்தவர்களை இரோப்பியரிங்கே வந்தபின்பு இரோப்பியருடையவேதத்தில்நூதனமாகப் பிரவேசித்தவர்களெ ன்றுசாதாரணமாய்நினைக்கிறார்கள்-இதுவுமல்லாமல்-மேலெழுதி யவீரமாமுனிவருடையசரித்திரத்தைவாசிப்பவர்கள் முதலாய்மே ற்படிசரித்திரத்திற்காட்டியபடிஆதியிலேவேதபோதகஞ் செய்த இந்த ஆசியகண்டத்திற்குட்பட்டபூதநாடாகிய-அர் - தோமை யாரொப்பவரும்வேதமுபதேசிக்கப்பட்ட அநேககாலத்திற்குப் பின்புவந்த இரோப்புககண்டத்தைச்சேர்ந்த தேசஸ்தர்களாகிய -அர்-சவேரியார் -தத்துவபோதகசுவாமி- வீரமாமுனிவர்முதலா

ணவர்களைப்போலே இரோப்பியரென்றும்- கிறிஸ்துவேதந்தானே இரோப்பியருடையவேதமென்றுமெண்ணுவார்கள். ஆனால்பூகோளவிவரங்களையும், பூர்வபரம்பரைகளையும், பொய்யாதவேதசரித்திரங்களையும் ஆராய்ந்துபார்க்கிலப்படியெண்ணுவதற்கு எவ்வளவேனுமிடமிராது- அஃதெவ்வாறெனில்- இந்தப்பூகோளமானது அசியகண்டம்- அபரிக்ககண்டம்- அமெரிக்ககண்டம்- இரோப்புக்கண்டமெனநான்கு கண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது- இதுகளில் அசியகண்டத்திலுட்பட்ட- துர்க்கி- சீரியா- அறாபி பார்ஸ- இந்துஸ்தானி- திபேத்- தார்த்தாரி சினமுதலானராச்சியங்களுக்குள்ளே அசியகண்டத்தில் தென்கிழக்குப்புறமாயிருக்கிற இந்துஸ்தானியென்கிறதேசத்திலே- இந்துக்கள்- அல்லது- ஈந்தியரென்றும் பாமிருக்கின்றோம்- இவ்வசிய கண்டத்திலேதானேவடமேற்குப்புறமாயிருக்கிறசீரியவென்னு மிராச்சியத்தில்தேவபூமியென்னும் யூதேயநாட்டில் இரக்ஷகர் திருஅவதாரஞ்செய்தருளினார். அவதரித்தநாதரோடுகூடவிருந்த பன்னிரண்டு பிரதானசீஷர்களிலொருவராகிய- அர்- தோமையாரென்னுமாதவமுனிவர்- கடவுள் திருஅவதாரஞ்செய்த- ௬௰௬- ம்- வருஷத்திலேதானே இந்துஸ்தானியைச்சேர்ந்த இந்த ராச்சியங்களில் மலையாளத்தில்வந்து வேதமுபதேசித்துசந்நியாசமடங்களையு மேற்படுத்திக்குருக்களையும்நியமித்துக்கடைசியில்மயிலாப்பூருக்குவந்திருந்துமரணமாகி மூத்திபேறுபெற்றார்- அவருமிரோப்பியரல்ல அவர்போதகஞ்செய்தபாஷையு மிரோப்புபாஷையல்ல- அப்படியிருக்க- இந்தநமது அசியகண்டத்திற்குட்பட்ட தேசபாஷைகளிலொன்றாகியசீரியபாஷையிலே- அர்- தோமையார் வேதோபதேசம்பண்ணினபிரகாரம்மலையாளத்துக்குருக்கள் அந்நாள்முதற்கொண்டிந்நாள்மட்டும் அப்பாஷையிலேவேதமந்திரங்களைச்சொல்லிப்பூசைசெய்கிறார்கள்- இதற்குத்திருஷ்டாந்தமென்னவெனில். தமிழில்வேதமந்திரங்களில்வழங்குகிறசிலுவையென்னு மொழியேமேற்சொல்லிய சீரியபாஷைச்சொல்லென்றறியவும் அந்நாள்முதற்கொண்டிந்நாள் மட்டும் இத்தேசங்களிலுள்ளசமஸ்தசாதியாரிலுமெண்ணிறந்த மனிதர் இத்தேசங்களில்வழங்குகிற மற்ற மதாச்சாரங்கள் நீங்கலாகத்திங்கள் தேசாச்சாரங்களிலும் குலாச்சாரங்களிலு மெவ்வளவேனும் வழுவாமல் சர்வேஸ்வரனுடையசத்தியவேதத்தையனுசரித்துக்கொண்டுவருகிறார்களாதலால்- கிறிஸ்துவேதமிந்தத்தேசங்க

ளிலேகடவுளவதரித்தநூறுவருஷத்துக்குள்ளாகப்போதகஞ்செய்
யப்பட்டதென்பதுபரம்பரைவர்த்தமானங்களாற்பிரத்தியட்சமா
மே. பின்பு, கடவுளவதரித்த, ௲௪௱௯௰௮ம் (வரு), வைகாசிமீ௰௮௨
இரோப்பியரில் - பொர்த்துகீசரொன்னுஞ்சாதியாரிந்தஇந்துதேசத்
துக்கரையிலவந்தார்கள். ௲௫௱௯௰௧ம் - (வரு), இங்கிலீசுக்காரர்கள்
வந்தார்கள். ௲௫௱௯௰௪ம் (வரு), உலாந்தக்காரர்கள்வந்தார்கள் -
௲௬௱௬௰௮ம். (வரு) பிராஞ்சுக்காரர்கள்வந்தார்கள் இப்படியிரோப்
பியரிங்கேவந்துவர்த்தகங்கள்செய்யவும் - இராச்சியங்களையாளவு
ம் - மற்றுமுள்ளதொழிலாளிகள் தங்கள்தங்கள் - லவுகீகதொழிலை
ச்செய்யவும்வந்ததுபோலே. அவர்களிலே குருக்களாயிருக்கிறவர்
களுந்தங்கள்வைதீகத்தொழிலாகியவேதபோதகஞ்செய்யவந்தா
ர்கள் - அஃதெப்படியென்னில் - இந்த இந்தியில்மேற்சமுத்திரக்
கரையிலேமேற்சொன்னபொர்த்துகீசுககாரர்முதலவந்திறங்கின
பொழுது அந்தக்கரைதுறையிற் கட்டியிருந்த அனந்தமான கோ
யில்களையும். அனந்தமாயிரங்கிறிஸ்தவர்களையுங்கண்டு அவர்களாச்
சரியப்பட்டுப்பிர்மித்து - அர் - தோமையாராலிந்தத்தேசஸ்தர் ஆ
தியிலுபதேசம்பெற்றார்களென்ற பூர்வோத்திரங்களெல்லாமறிந்
து. அர். தோமையார்மரணமாயினவிடமெங்கேயென்று விசாரித்
தங்கேயிருந்துகீழ்ச்சமுத்திரக்கரையிலிருக்கிற மயிலாப்பூருக்கு
வந்து அவர்மரணமாயினவிடத்தைக்கண்டங்கேமுன்னிருந்தலதை
விடபிரபலமானகோயில்கட்டுவித்து வேதோபதேசம் பண்ணுகி
றதங்கள் சாதிக்குருக்களையும்நியமித்துவைத்தார்கள் - அதுமுதற்
கொண்டு இரோப்புதேசப்பாஷைகளி லொன்றாகிய லதீன்பா
ஷையில்வேதமுபதேசிக்கிறஇரோப்புக்குருக்கள்வரத்தொடங்கி
னார்கள் - இவ்வண்ணமேமற்றஇரோப்பியர்வந்திறங்கினஅந்தந்த
விடங்களிலே வேதோபதேசம் பண்ணுகிற குருக்களும்வந்திருந்
துகிறிஸ்துவேதத்தைப்பிரபலம்பண்ணத்தலைப்பட்டார்கள் - ஆத
லாலிரோப்பியரும், கிறிஸ்துவேதத்தையுபதேசம் பண்ணுகிற
இரோப்புக்குருக்களுமிந்த இந்திக்குவரத்தொடங்கி யிப்பொழு
து ௲௭௱௨௰௪ - வருஷமாகிறது - கிறிஸ்துவேதமிந்தஇராச்சியங்களிலு
பதேசம்பண்ணப்பட்டிப்பொழுது - ௨௱௭௰ - வருஷமாகிறது -
இப்படியிருக்கையில்கிறிஸ்துவேதமிரோப்பியருடையவேதமெ
ன்பதும், அவர்கள்வந்தபின்புதான் இந்தத்தேசஸதர் அந்தவேத
த்துட் புகுந்தாரென்பதும் - முற்றுமுண்ணாதமுழுப்பேதைமை

யாமே-இரோப்பியர் வேதமென்றுசொல்வோமாகில் சீனதேசத்திலிருந்துசீனருங்கிறிஸ்துவேதக்குருக்களாக வருவதால்சீனருடையவேதமென்றும்- அரமேனியாதேசஸ்தர்கிறிஸ்துவேதககுருககளாகவருகின்றமையால் அரமேனியர்வேதமென்றும் கொங்கணதேசத்திலிருந்துகொங்கணியபிராமணரும்,மலையாளத்திலிருந்துமலையாளிகளுங்கிறிஸ்து வேதக்குருககளாக வருகின்றமையால் கொங்கணர்வேதம்.மலையாளத்தார் வேதமென்றுஞ் சொலலவேண்டியிருக்கும் கிறிஸ்துவேதமென்றுஞ்சர்வேஸ்வரனுடையசத்தியவேதம்உலகத்திலுள்ளசகலமனுககுலங்களுக்கும்பொதுவேதமாதலாலனேவோருக்குஞ்சொந்தமாயிருககின்றதொழிய·ஒருதேசத்துக்கும்,ஒருசாதிககுமாத்திரமுரித்தாயிருக்கமாட்டாது-ஆகிலுங்கடவுள்இரோப்புக்கண்டத்திலவதரியாமல் அசியகண்டத்திலவதரித்ததினாலும்-இரோப்பியருக்குமுந்தி௩ந்தியர்கிறிஸ்துவேதத்திலேற்பட்டதினாலும்இரோப்பியரைவிட ௩ந்தியர்வேதத்துக்கதிகசொந்தக்காரரென்றற்பசந்தேகமின்றிச்சொல்லலாம்-இவ்வண்ணமேயிது தெளிவானபின்புஇதன்மேலும்அனுமித்துககிறிஸ்துவேதமுண்டாகியிப்பொழுது - ௲அ௱௨௨.வருஷந்தானேயென்றும்.இந்நாட்டில்வழங்கும் சைவ-வைணவமுதலான சமயங்கள் அநேக சதுர்யுகங்களிலுள்ளஅநேக கோடிவருஷகாலந்துவக்கியுண்டாயிருக்கிறதென்றும், இதனாலேகிறிஸ்துவேதம் நூதனவேதமென்றும்-சைவ- வைணவமுதலான சமயங்களேபூர்வ சமயங்களென்றுஞ்சொல்வார்கள்-ஆனால் கிரேதாயுகத்துக்குவருஷம்-௰௭லக்ஷத்து.௨௰அ௲-மென்றும்-திரேதாயுகத்துக்கு- வருஷம்.௰௨-லக்ஷத்து-௯௰௬௲-மென்றும்-துவாபரயுகத்துக்குவருஷம் . அ-லக்ஷத்து-௬௰௪௲-மென்றும்-கலியுகத்துக்குவருஷம்·௪-லக்ஷத்து௩௨௲.மென்றுஞ் சூரியசித்தாந்தத்திற்சாதாரணமாய்ச் சொல்லப்படுகிறதல்லோ.இஃதிப்படியிருக்க-பவிஷியோத்திரபுராணத்தில் கிரேதாயுகத்துக்குவருஷம்-௨௰௪-லக்ஷமென்றும்- திரேதாயுகத்துக்குவருஷம்·௰௫.லக்ஷமென்றும்.துவாபரயுகத்துக்கு-௰- லக்ஷமென்றும்-கலியுகத்துக்குக்கொஞ்சங்குறைய-௫-லக்ஷமென்றும். தேவிபாகவதத்தில்·கிரேதாயுகத்துக்கு.௨௰.லக்ஷமென்றும்-திரேதாயுகத்துக்கு-௰.லக்ஷமென்றும்.துவாபரயுகத்துக்கு.அ.லக்ஷமென்றும்.கலியுகத்துக்கு ௬.லக்ஷமென்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது.இதுவுமன்றி·கிரகமஞ்சரியென்னுஞ்சோதிஷசாஸ்திரத்தில் கிரேதாயுகத்துக்குவருஷம்-௯௱௬௰-என்றும். திரேதாயுகத்துக்

குவருஷம்-௭௱௨௰-என்றும் - துவாபரயுகத்துக்குவருஷம்- ௪௱௮௰-என்றும்-கலியுகத்துக்குவருஷம்- ௨௱௪௰- என்றுஞ்சொல்லப்பட்டிருக்கின்றது- இஃதிப்படி யொன்றுக்கொன் றொவ்வாமலநேகவிதங்களாகச்சொல்லுகிறதினாலும், பூர்வந்தொடங்கிநடந்ததுகளை நடந்தவண்ணமாய்ப்பரம்பரைக் கிரமமா யிந்நாட்டில் முன்னோர்தொடங்கி அந்தந்தக்காலங்களி லுள்ளவர்க ளெழுதிக்கொண்டுவருகிறவாடிக்கையில்லாததினாலும், வித்துவான்கள் தங்கள்மனதின்படியேதங்களுக்குத் தோன்றினபடிக்கு உள்ளகாரியங்களிலில்லாததுகளையதிகமாய்க்கூட்டியுங்குறைத்தும்பாடிவைத்திருக்கிறதினாலும், மேற்சொன்னயுகங்களுடையகணக்கையுள்ள தென்றுநிச்சயித்துக்கொள்ளவும் - வேறேவகையில் இவ்வளவுதானென்றுநிச்சயிக்கவும்பரிச்சேதம்நியாயங்கிடையாது. இதனால்மேற்சொன்ன-சைவமுதலானசமயங்கள்உலகோற்பத்திமுதலாயுள்ள சத்தியவேதத்துக்குமுந்தினதென்றுபேதையிற்பேதையுஞ்சொல்லான் சர்வேஸ்வரன்வேதமென்றும் சத்தியவேதமென்றுஞ் சொல்லப்படுகிறகிறிஸ்துவேதமோவென்றால்- உலகம்படைப்புண்டநாள்முதற்கொண்டுண்டாயிருக்கிறதென்பதுபிரத்தியக்ஷமாமே. அஃதெப்படியென்னில். அனாதிசர்வேஸ்வரனானவர்உலகத்தைப்படைத்து ஆதிமனிதனையுண்டாக்கின ஆதியுகத்திலவனுள்ளத்திலேதானேதெள்ளறிவென்னும்ஞானமாகியவேதத்தை யியல்பாகவே யெழுதித்தந்தருளினார்- அதற்கேஇயல்வேதமென்றுபெயராம் - அதன்பின்பு - இரண்டாவது-மோயீசனது யுகத்தில்மேற் சொல்லிய இயல்வேதத்தைச்சிலாசாதனமாகஇருகல்லின்மேலெழுதியனுக்கிரகித்தருளினார்இதுவே வரிவேதமெனப்படும்-பின்னும் - மூன்றாவது சுதனாகியசர்வேஸ்வரன்- நாமாதாரமாயிருந்து ஆசிரயாதாரமாகியகிறிஸ்துவென்னும்இரக்ஷகராக அவதரித்துஇயல்வேதமென்றும்-வரிவேதமென்றும் - மேற்சொல்லியஇருவகையினையுந்தமது திருவுடலாகிறஏட்டின்மீதிலே - இயல்-வரி-அருள்- இம்மூன்றினுறுப்பாகியமூவாணிகளாலெழுதித்தமதுதிருவிரத்தமாகியமைக்காப்பிட்டுத்தந்தருளினார். இதுவேஅருள்வேதமாகியகிறிஸ்துவேதமெனப்படும்-ஆதலால. ௲௮௱- ச்சிலவான வருஷமென்பது கிறிஸ்துவினுடையதிருஅவதாரக்கணக்கும் - அருள்வேதமனுக்கிரகம்புரிந்த காலமுமாமேயொழிய வேதமேயுண்டான காலக்கணக்கல்லவென்றறியக்கடவது.

வீரமாமுனிவர்சரிதைப்புறநடை-முற்றிற்று.

# வாமன்சரித்திரம்.

## ஞானசமாமுனிவருக்கும் - வாமனுக்கும் நடந்த சல்லாபம்.

குளிர்ந்தநிழலைவீசியுச்சிப்பகலினுமிருண்ட சண்பகச்சோலையினடுவேதிகழ்ந்தமண்டபத்திலொருநாள் மூவாசையற்றதவத்தின் ரூபமாகத்தோன்றின ஞானசமுனியானவர் தம்மைச்சூழ்ந்தடர்ந்தடைந்தசபைக்கெல்லாம்பரமகதியைச்சேருஞ்சுகிர்தநெறியைக் காட்டிக்கொண்டிருந்தார் - இவ்வாறிவர்திருவாய்மலர்ந்தோதின வேதநூலினியதேனென்றவரவர்தஞ் செவியா லுட்கொண்டுமனமலர்ந்திருக்கையிலவர்களுக்குள் பெருஞ்செல்வத்துயர்ந்துயடைமுகத்தஞ்சாதவீரநெஞ்சுடையதளக்கர்த்தனாகியவாமனென்றொருவனித்தமெய்ஞ்ஞானவிதிகளைவிரும்பிக்கேட்பான்• கேட்பினு நெடுநாள்பூந்தடாகத்திற்கிடந்து வேர்கொள்ளாத பாசிபோலவனுமெல்லாவற்றையு முட்கொண்டொப்ப நடக்கமாட்டாதிருப்பான்-எக்காலமுமிரணப்போரிற் செயங்கொண்டவனாயினும் பாவத்திற்பழகிக்காமப்போரி லெப்போதுந்தோர்வைப் பட்டவனுவான்- ஆகையாற்கேட்டவுணர்வினுள்ளசைந்துபுண்ணியத்தின்மேலாசையுட்கொண்டவுடனே தான்விலைமாதரை நினைத்து மயங்கித்தடுமாறிமனக்கவலையாற்றுதருகிறோவான் -நொந்திச்சிந்தையுட்கொள்ளாதொருநாளந்த முனிவரைநோக்கிச்சொல்லத்தொடங்கியிருவருட்சல்லாபமுண்டாயிற்று - ஆகையால்•

வாமன் — ஐயாவாலிபத்திலருந்தவதமோடுநீர் பழகினதாகையிற் சொன்னதெல்லாஞ்செய்வதுமக்கெளிதாமே. நானோவென்றால் பாவத்திற்சென்மித்துப்பாவத்தோடுவளர்ந்துபாவத்துள்ளமிழ்ந்திக்கிடக்கவே வாயூமை பாடவுங் காலொண்டியாடவுங் கைமுடவன்சிலம்பம்போடவும் பல கற்பனைகளைக்கேட்டாற் போலேநீரோதினபடி நடப்பதென்னலாற்றுதையா.

முனிவர் — இதைக்கேட்டந்தமுனிவரவனுள்ளத்தொளித்தநோயைக்கண்டினிதருந்தனையோடுள்ளிரங்கித்திருவுளம் பற்றிச்சொல்வார்-கொலை முகத்தஞ்சாதரியபலபோர்க் களங்களைக்கலங்காமற்கடந்தவீரனே-புண்ணியத்தின்முகத்தஞ்சி வசைபடக் குழம்பிப்பசைபடத்தளம்பிக்கிடப்பானேன் - மனந்துணிந்தெத்தொழிலாயினுஞ்சிறிதுகாலம்பழகினாலேபோதுமுடனே யெத்தொழிலு

மெளிதாம் வில்லையேந்தலும் விசைபடவளைத்தலும் அம்புகோத்தலும் நாணிபிடித்தலுங் குறிபடவெய்தலும் நெடுவாள் சுழற்றலு மெதிர்பாய்ந்துவெட்டலுமெதிர்வெட்டு விலக்கிக்காத்தலுங் கேடகத்தொளித்துத்தாக்கலுமற்றப்போர்த்தொழிலெல்லாமாயுத மொன்றும்பிடியாதவர்கள் மலைத்துமயங்கும்படிக் கருமையல்லோவாகிலுமிப்போதிவையெல்லாமுனக்குமரிதென்பாயோ.

வா — சொன்னதெல்லாமுள்ளது - போர்த்தொழிலொன்றைநீக்கிமற்றதுமிகவுமருந்தொழிலென்றெனக்குத்தோன்றுமே இன்னங்கின்னார் செய்தொழிலதிசயப்படாமற்காணமாட்டேன் - வீணையைக்கையிலேந்திமுறுக்காணியைச் சுழற்றித்திண்ணெனநரம்பொலியெழும்படி மாத்திரை நிறையும்படிகொவ்வொன்றுயிழுத்துத்தடவிச்சமனுக்கினபின்னர் முழுவிரல்களைகொண்டுலாவின தன்மைக்குக்கடுகவோடிகிளம்புமினியசங்கீதப்பலவகை கேட்கும்போதிதுமனிதர்செய்யத்தகுந்தொழிலல்லவென்பேன் அப்படியேமற்ற யாவுமறியாதவர்க் கல்லாமற் பழகினயாவர்கரு மெளிதே - ஆயினுஞ்சுகிர்தவழியிற்பழக்கமுந்துவக்கமும்வெகுவரிதையா.

மு — அப்படியல்ல சிலதொழிற்களிலே சிலர்நெடுநாட்பழகினுந்திருந்தச்செய்யவுமாட்டார் - அறத்தொழிலப்படியன்று - துணிந்தாலேபோது மவனவனுசைக்களவாகத் திருத்தமாகும் - மீளவுநான்சொல்லும்படிக்குநடக்க நிறையுள்ள வும்சுகசெலவங்களைவெறுத்துப்பூம்புகைகாட்டினமதுமலர்மெத்தைநீக்கிவெறுநிலத்திற்கிடக்கவும் பலசுவைக்கினிய விருந்துகளை யொழித்திலை காய்கிழங்குகளைப் பட்சிக்கவும் ரிஷிகளொப்ப வனவாசமாய்த் தவத்தைச்செய்யவும்வேண்டுமோ அல்லவல்ல - எல்லாராலுமிகழப்படுந்தீவினையொன்றைவிட்டு நல்வினையொழுக்கத்தோடேநிற்கத்துணிந்தாற்போதுமேதுணிவதேகாரியம்.

வா — பகல்செய்யுஞ்சுடர்முகதெதிர்நின்றமின்மினிப்பூச்சிக்கொத்தநான் சகல நூற்கடலைக்கடந்தவறிவுடையபரம ஞானிநீரறியாததொன்றுண்டெனக்கூறுவேனோ - என்னுயிர்மயக்கவருத்தும் பழநோய்காட்டச் சிறிதுவசனங்களைப் பிதற்றவுத்தாரம் வேண்டுமையா.

மு — கூசாமற்சொல்ல - உயிர்நோயெல்லா மொளிக்கவேயசாத்தியம்பிறக்கும் - வெளியாகவே தீர்ந்ததென் றெண்ணலாகையாலினியுள்ளெண்ணினதெல்லாம்வெளிவிட.

வா — ஆண்டவருந்தொழிலாளிதானே - பல்வென்புகளை
நிரைபடவைத்துமற்றதுகளோடே பலநரம்புகளைப்பிணிவிசை
படமாட்டித்தோற்பையிலேபோட்டுக்குருதிதோய்ந்ததசையுள்
ளிடுப்பாவத்திணித்து நிறையநிரப்பித் தோலின்படத்தில்மே
லழகுறப்பலநிறம்பூசியொன்பதுவாசலைவிட்டுநமக்கிந்தவுடலைச்
சுவாமிமுகித்துத்தந்தார் - தந்தவுடலை நாமும் பேணிப்பூம்புகை
காட்டிக்கந்தப்பொடிகளைப்பூசி பரிமளநீராட்டிப் பாலினுரைக்
கொத்தமென்றுகிலுடுத்துமின்னியவணிகலன்சுமக்கமாட்டி மது
மலர்மாலைகள்சூட்டிக் கம்மென மணக்கத் தரித்தணிந்துபகலிர
வோயாமற்பேணினும்விடாமலூற்றையூறிநாறுமுடலிதுவன்றோ
இவ்வகைப்பட்ட நீசவுடலோடழியாத வுயிரையாண்டவரிறுகப்
பிணித்தார் - இத்தன்மையாலுயிர்சிறைபட்டிருக்க வுடல்வழியாக
த்தானுணர்வடைய வேண்டியிருக்கையிலிவ்வுடம் பெற்றேரமுந்
தனக்கின்பந்தேடிப் பலமுறையுண்மைகாட்டாமற் பொய்யையு
ணர்த்தியுயிர்கெடும்படிக்குள்வினைகளைக்கொண்டுவிடுமே - இவ்வா
றுயிர்க்குத்துணையாகவந்தசடலஞ் சற்பனையாகக்கொடியவுயிர்ப்
பகையாமே - இதுவுமுட்பகையாகக்கொள்ள நித்தமேபோராடி
யதைவெல்லுவதரிதே. ஆயினும்புறத்துநின்றிதனோடுடன்பட்டுயி
ரைக்கெடுக்கவிதிலேயுங் கொடியவேறொரு பெரும்பகையுண்டை
யா - உயிர்த்துணையாகவுடலைத் தந்ததேயுடற்றுணையாக மாதரின
த்தைச்சுவாமிகற்பித்துத்தந்தார். எங்கள்வினைமிகும்படிக்குநம
துயிர்க்குடலேயுட்பகையானதன்றி ஸ்திரிசாதியும்புறப்பகையாகி
யிரண்டுங்கூடி யொருகையாகப் பொருதுங் காலத்தெவனிற்பா
னையா - நீர்பஞ்சேந்திரியங்களைவென்ற தபோதனராகக் கொள்ள
விதெல்லாமறிவீரின்னங்குருதியொழுகும்பெரும்புண் பலமுறை
பட்டநானே நன்றாயறிவேனந்தோ - மாதரின்சறுவாங்கமு முயிர்
க்கொலைக்காயுதமாமே - மின்னியிருண்டதலைமயிர் மனிதரைப்
பிணிக்கும்பெரும்வலையாகவு மீனெனவுலாவிப்பாய்ந்துநிலைகொ
ள்ளாதாடு மிருகண்களேநெஞ்சைப்பாய்ந்து பிளக்குங்கொடுவே
லாகவும் - அவர்கள்சொல்லு மினியசொல்லேநஞ்சுகலந்தபாலாக
வும் - பாடுங்குரலே செவிவழியாலுண்ணுழைந்துயிரைக் கொல்லு
நஞ்சுதோய்த்தஅம்புகளாகவும் - இவ்வாறுயிரைக்கூந்தலாற்கட்ட
வுங்கண்ணாற்காயப்படுத்தவுங் குரலாற்கொல்லவுமவிடாமற் செய்
வார்கள். இதுகளுமித்தொகைப்பட்டபலவுமொருமுகமாகப்போ
ர்பொருமெதிர்க்க மனம்வெந்துருகிக்குலைந்துகலங்கியாசை மிக

வேமெய்யைமறந்துதன்னைமறந்துநல்வினைதீவினையொன்றுமறியாதுயிர்படுங்கேடுமட்டோ - அப்பொழுதொருவன்செய்தபிரதிக்கினையுணர்ந்தஞானம்படித்தகல்விகேட்டவுறுதிகளொன்றுமுதவாதையா.

மு — ஆசைமிகுந்தபோதுகல்விஞானமுதவாதென்றாயாகிலுமாலசையும்பாவங்களு மிகுந்த பின்னிறந்து தீயெரி நரகத்தில் விழுந்தபோதங்கேயுதவுமோ - காமநோய்சுடச்சுடமனம்வெந்துருகுமென்றாயாகிலுமதுவேகும் வேகத்தெழும்பும் புகையிருள்மண்டியதனால்வந்தநோயுங்கேடுமறிகிறதரிதாம்- நீயோவென்றாலிதெல்லாமறிந்திருக்க மயங்கு வானேன்-வாய்க்கினிதென்றாலுமறிந்துநஞ்சுண்பது பேதைமையல்லோ -அமிர்தமென்றுநஞ்சினை நககினாலதுகொல்லாதோ.

வா— இதெல்லாமறிந்தாலும் பற்றிய காமத்தீயை யவிப்பதெனக்கரிதையா.

மு—அரிதென்றாலதினமருகருகணுகிச் சேருவானேன் - நித்தமென்மேலுமாசையென்கிறவிறகுகளைக் குவித்துவெகுந்தீயைத்தூண்டித்தூண்டிக்கிளப்புவானேன்.

வா—பெண்ணினத்தாருக்குஆண்டவர்மலர்ந்தமுகத்திலெழுதினவழகுமிகுதியாலதைக் கண்டபோதாசை வெறுப்பதரிதையா.

மு—காஞ்சிரப்பழமிகச்சிவந்தழகானாலுமுண்பாயோவென்ன.

வா—நெடுநாள்வேர்கொண்டவாசையுடனேபிடுங்கிறதெளிதோ

மு — எளிதென்றேனு மரிதென்றலையா லாசையதிகமதிகமாய் வேரூன்றிவிலைமாதரைவிழிப்பவுமணுகவுங்கேட்கவும்பேசவும்விடாமலேன் - இப்படிச்செய்திருக்கவேண்டியதல்லோ - பழம்புண் ஒருநாளில் மருந்தினாலாறுதென்றுதானதைத்தினமேகையாற்கிழித்துப்புரையோடச்செய்தாலாறுமோ.

வா—நானேபுண்ணாகவுமானபுண்ணிற்புரையோடவுஞ்செய்கிறேன் - முன்விரிவாகச் சொன்னதன்மையால் மாதரதுசறுவாங்கமெல்லாம் நஞ்சுதோய்ந்தவாயுதக்காடாமே - வேண்டாமென்றாலுமித்தப்போரிலிறங்கினவருளுயிர்ச்சேதமில்லாதுதப்புவாரில்லை.

மு — நீசொன்னதெல்லா முண்மை- மெய்யாகையிலிந்தச்சமரிற்பொருதும்வகையு மதைவெல்லும் வழியும்வேறுமென்றறிவாயாக - இரணச்சமரிடத்துவளைத்தவில்மேலெதிர்த்துப் போய்ச்சரமழையிலஞ்சாதவன் செயங்கொள்ளுவான் - காமப்போரிலிவ்வாறன்று - இதிலஞ்சிப்பின்வாங்கியோடினவர்க்காகும் வெற்றி

மாதர்சர்வாங்கமெல்லாமுயிரைக்கொல்லுமாயுதமென்றாயாகிலு மவர்களையண்டாமற் காணாமற்கேளாமற் பேசாமல்விலகிநின்றால வர்களாலுயிர் லயம்வருமோ. விறகினையில்லா விட்டாலநெருப்புத் தானேயடவியுமுன்னுட்பகைய மாதர்புறப்பகையுமுயிர்க்கிருபகை யென்றாய்-ஆயினும்புறப்பகையுள்ளே நுழைய வுட்பகைக்குள்ள கண்முதலைந்துவாசலை நீதிறப்பானேன்.

வா — இப்படியாகில் வீடூர்நாடுநீக்கிமனிதர் சஞ்சரியாதவன த்திற்புகுந்தொளிக்கவேண்டியதாகும்

மு — அத்தனை தூரப்போகவுந்தேவையில்லை - உனண்டையி லிருக்குஞ்சுடுகாட்டுக்குப்போயங்கே யுருண்டுருளவேறிந்தகபால ங்களையுற்றுப்பார்க்க-உன்னைமயக்கவிருக்குமுகமதுவே-பவளத்து றையிற்கோத்தமுத்துவடம்போற்செவ்வுதட்டுளமிநகையாய்த் தோன்றினபல்லுமதுவே-வான்மீன் போலவிளங்கி யெறிவேல் போலேசினந்துன் னெஞ்சுள்ளூருவித்தைத்த விருகண்ணிருந்த விடமிதோ அருவருப்புள்ள கிடங்குபள்ளமதுவே-நீயபேட்சித் த வில்லெனவளைந்தபுருவமும்பிறையென வொளிர்ந்த நுதலும் செந்தாமரையெனமலர்ந்தவாயுமிதெல்லா மெங்கே யிந்தமுகத் திலே தானிருந்ததன்றே - நீயபேட்சிக்குமழகியமுகமு மித்தன் மைத்தாவதுநிச்சயமாகிவிதற்கோவுயிர்கெடப்பொருளறமானங் குறைய மிருகத்தோடொத்தவின்பத்துக்காசைபடுகின்றாய்-இத ற்கோருபாயம்பாராமற்கல்வியுணராம லுறுதிகொள்ளாமலொரு துணிவின்றி மயங்கிக்கிடக்கின்றாய்.

வா — உமதுவாய்மொழிதிருவிளக்காகமயக்கத்திருளை நீக்கி னதாகையிலென்மனந்தெளிந்ததுசரியேயையா - ஆனால்-நெடு நாள்பழக்கத்தினாலேமனம் பலயீனங்கொண்டதாகையிற்சடுதித் தேறித்துணிவதரிதையா.

மு — பழம்புண்ணாற்றநெருப்புவேணும் - புண்ணியவானே வாசமதுமலரரும்பின் றன்மைத்திளமையின் முகைத்த வழகினை போனே-பகைப்படைவணங்குமிளையசிங்கமொத்தவீரனே-யுன் டலவல்லமைபராக்கிரமமெண்ணாதே- பசியவுன்னருமைப்பருவ முநம்பாதே-சினந்ததிர்ந்தடித்தபெருங்காற்றின் முகத்திளங்கா ய்களுமுதிரும்-பிறந்தயாவருமிறப்பதுநிசமே-இன்றோவன்றோ வெப்பொழுதோ வென்றொருவனுமறியான்- ஜென்மித்தவயிற்றி லும் வளர்த்தகையிலும் வளர்பாலியத்திலும் வீரவயதிலுமெத ருணத்திலு மெந்தஸ்தலத்திலும்வியாதியுமொன்றின்றி நித்த

மேபர்பலர்சாவது காணுயோ-ஆயினுஞ் சாவதெல்லாருக்கும்
பொதுமைதானே-தீயோர்க்குவிசேஷிகதியாம் நரகமே-மயக்க
ம்நீங்கித்தெளிந்துதேறக்கடவாய் - இப்பொழு திங்கேதீவினை
விடுவதொன்றே-யெப்போதுமங்கே தீயிலேவேவதொன்றே-
யிவ்விரண்டிலொன்றுதப்பாது - நாய்கரும்பொதுவாய்நிற்கும்
நீச சுகத்தைநாளுநாள் நக்கிக்கொண்டிருந்தபின்பு-ஆசந்திர
காலமு மெரிநரகத்திலோயாமற்பேயோடேவெந்து குறையாம
லொருதுசாகாமற்செத்து முகியாமற்பட்டுக் கதறியலறியென்றெ
ன்றைக்குமாருத வேதனையனுபவிப்பது நல்லதென்றோ துணிய
மாட்டாதிருக்கிறாய்-எதிர்த்தபகைவனைக்கொல்வதுமாத்திரமோ
வீரம் உன்னுயிர்சாகாதபடிக்குமோந்தையானவிச்சைகளைக்கொ
ல்லத்துணிவதேவீரர்தொழிலாமன்றோ.

வா— போதும்போதுமாண்டவனே நீர்தயைசெய்துசொல்
லிக்காட்டின ஞானவுறுதிகள் கூர்ந்த அம்புகள்போலென்மனத்
துட்பட்டுருவிமயக்கத்தெழுந்தவாசையெல்லாம் வேருடன்பிடுங்
கிற்றே இற்றையவரையுமறியாமற்செய்த வக்கிரமங்களையுமெனை
க்குவரவிருந்தகேடுகளையுமிப்போதுநன்றாய்க்கண்டுபிடித்து நா
ணியினிதீவினைவெறுக்கவும் நல்வினையனுசவுந் துணிந்தேனையா
வென்றுசரண்மேல்விழுந்தழுதான்-முனியானவருமவனையெடுத்
துமார்போடிறுகத்தழுவியாறுதலுமுறுதியுமாகவாசிர்வதித்தனு
ப்பினார்-வாமன் மனமுகநோக்கஞ்சருத்தாசை யிவையெல்லாம்
வேறாகித்தானும்வேறுமனிதனாய்க்களிகூர்ந்துபோனான்.

வாமன்சரித்திரம்-முற்றிற்று.

---

## தேம்பாவணிப்பாடல்.

பாற்கலந்திட்டதெண்ணீர்பால்குன்றும்பண்புமில்லால் *
மேற்கலந்தொளிர்ந்தவெய்யோன்வெயிலுமுன்னெரித்ததீபம் *
போற்கலந்திசைத்தமற்றைப்புண்ணியந்துறவுவாய்ந்த - *
சாற்கலந்தியல்பையேற்றுந்தகுதியோவென்றான்பாலன் *
தெருட்டகுமுணர்விற்சான்றோன்சேடனைத்தழுவிச்சொல்வா *
னருட்டகுமுணர்வைப்பூக்கமரும்பொறையீகைமற்ற - *
மருட்டகுமியல்தீர்மாட்சிமறையைமீன்சூழ்ந்ததேபோற் *
பொருட்டகுநாட்டில்வைகும்பொலந்துறவணியுமன்றோ *

மீயகன் றுயர்ந்தமாண்பாள் விளங்கவேயுலகமூன்று - - *
மாயகன் றொன்றுநீத்தையாயிரத்திருநூறாண்டிற் - *
பாயகன் றொளியிற்சான்றோன்படரிருணீக்குமுன்னர் - *
நாயகன்மருளைநீக்கநாளெனவாயினானே, - *

உரை— வானுலகினுயர்ந்த மாட்சிமையுடைய கன்னித்தாய்கதிரைவீசிக்கொண்டு நிற்பவே - மூவுலகமுண்டாக்கியொன்றுகுறைய வையாயிரத்திருநூறுவருஷமாகிச்சூரியன்பரப்புந் தன்னொளியாலிருளைநீக்குமுன்னராண்டவனுங் கொண்டமயக்கத்தை நீக்க நம்மைப்போலமனிதனானானென்க. - - - *

விண்கிழித்தோங்கிமின்பயில்கொடிஞ்சிவேய்ந்துயர்தேர்த்திரள்
காப்போ - கண்கிழித்தொளிபாய்வாட்டிரள்காப்போகால்தவிர்
பரித்திரள்காப்போ - மண்கிழிதொழுகும்புனலெனச்சீறிமதம்
பொழிகரித்திரள்காப்போ - புண்கிழித்துடலார்காப்பதோநீயே
புரந்துசெய்காப்பதுகாப்பே. - - - *

உரை— மேகத்தைக்கிழித்துயரப்பட்டவொளிவிடுஞ்சிகரமுள்ள தேரின்றிரளுயிரைக்காக்குமோ - கண்கூசவொளிர்ந்தவாள்முதலாயுதத்திரள்காக்குமோ - காற்றிற்குமுந்துங்குதிரைத்திரள்காக்குமோ - பூமியைக்கிழித்தோடுமாறுபோலச்சீறிமதம்பொழியும் யானைத்திரள்காக்குமோ - புண்படுத்திவல்லமையுடைய படைவீரர்காக்குமோ - நீயேபுரந்துசெய்யுங்காவலேயினிதாய்க்காக்குமென்க.

வஞ்சினருளம்போலளக்கரிதாழ்ந்தவாருணத்திடைவழிகீண்டி *
யஞ்சினர்நனையாக்கடக்கலேதந்தாயாறுநின்றதர்விடத்தந்தாய்
துஞ்சினர்சுகத்திலினிதுமூவிளையோர்சுசிக்கிடை குளிர்ந்துறத்
தந்தா - யெஞ்சினருன்னைநம்பியதன்மைத்தியற்றவொன்றுனக்கரி
துண்டோ. - - - - - - - *

உரை— வஞ்சினர்மனம்போலவளக்கப்படாதவாழங்கொண்ட கடலிடத்தில்வழியாகியஞ்சினயூதர் நனையாமலதைக்கடக்கத் தந்தாய் - சோர்தானென்னுநதிநின்றன்னார்க்குவழிசெய்யத்தந்தாய் - நபூக்கன்சூளையிற் போட்டமூன்றுபாலரு நித்திரை கொள்பவர் போலவினிதாய்நெருப்பிடத்திற் குளிர்ந்திருக்கத்தந்தாய் - குறை கொண்டயாவருமுன்னை நம்பினதன்மைக்கவரைக்காக்கவுனக்கரியதொன்றுண்டோவென்க. - - - - *

# எல்லீசுதுரையவர்கள்பாடிய

### தரவு-கொச்சகக்

## கலிப்பாவுக்கு

ஆ-முத்துச்சாமிபிள்ளையவர்கள்செய்தவிரிவுரை.

நன்றீபுமலையில்லா நன்மணியார்பேர்கடலாய் - - *
என்றுரைப்பார்நம்புவரோ-யிவருக்குத்தஞ்சமுண்டு - - *
நின்னீரமதிமலர்ந்தநிறமலரோயெனுட்செழிப்ப - *
முன்றெரிவைவிட்டென்பேன்முறையொன்றாப்நமசிவாய *

(நன்றீபும்) சகலநன்மைச்சுரூபமாயளவுபிரமாண மந்த பரியந்தமட்டியாத்தனையெண்ணெண்ணிக்கை யெல்கையெல்லையிவ்வளவவ்வள வென்றில்லாமல் நன்றென்னப்பட்ட தெல்லாமொன்றாககுவிந்தவோர்ஞானக்குன்றமாக வோங்கிநிற்க, அந்தநன்மைக்குன்றத்திமேலநின்று நன்மைப்பிரவாகவருவியாகவும், ஒயாமலூறுகின்ற நன்மையூற்றாகவும், கோடையிலுமுலராத கொழுஞ்சுயசுனையாகவும் பெருகிவெள்ளப்பிரளயமாகவோடிவந்து - பரலோக பூலோக பாதாள லோகமென்னுந்திரிபுவனமாகியசிங்காரவனத்திற்பாய்ந்து சராசரங்களுக்கு நன்மையீய்ந்து சகலமும்விளைய நடப்பித்தருளுகின்றீர் அதெதத்தன்மையென்னில்-தேவரீருடைய திருவுளப்படியேசோதிமண்டலத்துன் சக்கரவாளங்கள்சுழலுகின்றசெல்லுகின்றசுற்றுகின்ற நன்மையுஞ், சோதிமண்டலங்களால் பூமண்டலந் தொந்தப் பட்டுநடக்கின்ற சூக்ஷியானநன்மையும், பூமண்டலத்திற்பற்பல திசைகளிற் சக்கிரவர்த்திகளிருந்து பரிபாலனம்பண்ணுகின்ற நன்மையும், சக்கிரவர்த்திகளாற் றளகர்த்தர் மந்திரிபிரதானிகளந்தந்தஸ்தலங்களிலாளுகின்ற நன்மையும், அச்சமஸ்தான பதிகளுடைய சமரச விதரணங்களைக்குடிபடைகள் தாழ்ந்து செலுத்துகின்ற நன்மையும், இப்படிப்பட்ட நன்மைகள் கிரமமாகநடந்துவருகிறதினுல் சமஸ்தமானதுகளையும் விளக்குகிறவொளிபகவானுனசூரியனுதயாஸ்தமானஞ்செய்கிற நன்மையும், சந்திரன்றோன்றித் தண்ணொளிவீசிச்சுக்கிலகிரிஷ்ணநாள் தவறாதநன்மையும் , தாரகை ராசி கிரகங்கள்மாறுகிற பாய்கிறகடிகைலக்கணங்கள் தப்பாதநன்மையும், சாந்தசண்டமாக வாடை கோடைதென்றல் கொண்டல்வந்துவீசுகின்ற நன்மையும், தகுதி தகுதியாக வருஷ வசந்த குளிர்வேனிற்காலங்கள் வருகின்ற நன்மையும், சகலவிதவிலங்குபறவை நடக்கின்ற பறக்கின்றசந்ககம்பவகுகின்றநன்மையும், தாருமரம் பூண்டு

முதலிய விளைகிற தழைக்கிற புஷ்பிக்கிற காய்க்கிற கனிக்கிறநன்
மையும,இத்தன்மையாய்ச் சமஸ்தமான பொருள்களுக்குஞ்சகல
வித நன்மைகளையுந்தந்து இந்தநன்மைகளை யெல்லாமனிதனனு
பவிகக மனிதனையுண்டுபண்ணின நன்மையும், மனிதர்க்கு அறி
வுமுதலான அந்தக்கரண சத்திகளென்னு முள்ளுறுப்புகளையும்,
வசன கமன தானமுதலியதொழிற்களைச்செய்யும்புற வுறுப்பு
களையுங் கொடுத்தருளியநன்மையும் , மனிதரிவையெல்லா முண
ர்ந்து நன்றியறிந்து நன்மார்க்கத்தி லொழுக வேதநீதி முதலான
துகளை விதித்தநன்மையும், அவ்விதிப்படியொழுகின நல்லோர்
களுககு நித்தியமோக்ஷ வாழ்வைத் தந்தருளச்சித்தமா யிருக்கிற
நிகராத நன்மையும், இவ்விதநன்மை யெல்லாமீய்ந்து நடப்பித்
தருளப்பட்டநாதனே. (அலையில்லாநன்மணியார்பேர்கடலாய்)
அளவுமட்டுமாழமுமிவ்வளவென்றறியக்கூடாத அலையில்லாதநிலை
யாக நிற்கு மகண்டகருணைசமுத்திரமே-தன்வயத்தாதல்முதலில
னுதல் உடம்பிலனுதல் எல்லாநலமுளனுதல் எங்கும் வியாபகனு
தல் எவற்றிற்குங்காரணனுதலென ஆறிலக்கணமென்று மெண்கு
ணமென்றுஞ் சொல்லப்பட்ட லக்ஷணங்களன்றி யனந்த தெய்வ
லக்ஷணங்களாகிற திருமணிநிறைந்த தூயவருட்கடலே (என்று
ளைப்பார்நம்புவரோயிவருக்குந்தஞ்சமுண்டு) என்றும்மைநம்பு
கின்றவர்கள் மாத்திரமேசொல்வார்கள் - இப்படியும்மைவிசுவசி
த்து நம்புகின்ற நல்லோர்களாகிய விவர்களுககு மிவ்வண்ணமே
யும்மைநாடியிருக்கின்ற மற்றயாவருக்கு மஞ்சாத வடைக்கலமு
மெஞ்சாத தஞ்சமுமுண்டாகும்படியனுககிரகம் பண்ணியருளப்
பட்ட ஆதியானீர்தாமே. (நின்னீரமதின்மலர்ந்தநிறமலரோயெ
னுட்செழிப்ப) தேவரீருடைய அலங்காரமான அருள்மலரான
து என்னுடைய வாத்துமாவிலே புஷ்பித்தலர்ந்திருக்கின்ற படி
யால். (முன்றெய்வம்விட்டென்பேன்முறையொன்றாய்) நானறி
யாமையால் முன்னெருழுதமற்றதெய்வங்களெல்லாவற்றையும்விட்
டேகனுயிருக்கின்றவிறைவா வும்மைமாத்திரமே அத்தியந்தபத்தி
யோடே யனுசரித்தண்டியிறைஞ்சிப் பணிந்து ஆதிபரா அனாதி
பரா அனந்தாதிபரா சுயம்பராபரா வென்று ஒருங்கே முறைப்பா
டுசெய்து ஆசையாற்றேடி யன்பினுற்கூடிஆனந்தமாய்ப்பாடிவா
ழ்த்தி வணங்கிப் போற்றிப்புகழ்ந்து தொழுதுதோத்தரித்துஅர்
ச்சித்தாராதிக்கின்றேன்.(நமசிவாய,என்றென்று நிற்குமேக கட
வுளாகிய வுமக்கேநன்றென்றிதோ புரிந்தே னமஸ்காரமே. (க)

மண்ணாடுவானாடு மனிதர்சுரரெல்லவரும் - - - *
எண்ணாதவண்டமவை யிவற்றுள்ளாம்பலவுயிரும் - - *
கண்ணாட்டிற்காணாத மனமாட்டிற்கண்டபரம் - - *
நண்ணுமனினைவணங்கியென்பவமோ நமசிவாய. - - *

(மண்ணாடுவானாடுமனிதர்சுரரெல்லவரும்) இந்தப்பூலோகமும் பூலோகதநுமணிமகுடந் தரித் திராசரிக்கம்பண்ணுகின்ற இராச ராசாக்களு மதியூகிகளும் அதிவிவேகிகளும் வரும்பொருள் சொல்லுந் தந்திரோபாயமுள்ள மந்திரிபிரதானிகளும், மறமன்னரைக்கண்டு வரிசைவண்மைகொண்டு நானாவித சாமர்த்தியஞ் செய்யுந் தானாபதிகளும், வந்தபகைவரை முறியவடித்து வலிமைய கோட்டையரண்களை மாறாத வெற்றிதொடுத்து சிங்கம்போன்ற துங்க தளக்கர்த்தரும், மலிந்தபாக்கியவந்தரான யோக்கியபிரபுக்களும், மனநிலைமையுற்றுக் கனகல்விகற்ற மாண்புடையோரும், மாசிலாசற்சனரும், தேசுலாவிற்பனரும், சகலசாஸ்திரசம்பூரணவித்தியாசம்பன்னசாமர்த்தியரும், மாக்ஷிமையுள்ள ஞானருக்ஷியரும், மாதவமுனிவரும், மகாரிஷிகளு மறைவேதியர் முதலான மகாத்துமாக்களும், மாநிலத்திலே மனுக்குலங்களிலுள்ள சகலவிதமான சனக்கூட்டங்களும், வானமண்டலமுமதிலே அரூபிகளாய் லகு சூக்ஷம் அக்ஷயம் பிரகாசமென்னப்பட்ட சதுர்வரப் பிரசாதிகளாய் வாழ்ந்து சுவாமி பாதத்தைச்சூழ்ந்து திருப்பணிபுரியும் பத்திசுவாலகர் ஞானாதிக்கர் பத்திராசனர் நாதகீர்த்தியர் சத்துவகர் பலவத்தர் பிரதமிகர் அதிதூதர் தூதரென்று சொல்லப்பட்டவர்களுமாய்த் தேவ விஷயக பத்திமுதலான சுகுணாதிசயங்களிற் சிறந்து விளங்கப்பட்டவர்களுமாய் இத்தனையத்தனை இவ்வள வவ்வளவென்று தெரியக்கூடாம லெண்ணிக்கையிற் மேற்பட்டவர்களுமா யிலங்காநின்ற வானோர்கணங்களும், (எண்ணாதவண்டமவையிவற்றுள்ளாம்பலவுயிரும்) எண்ணவொண்ணாமலு மெல்லையில்லாமலுமிருக்கின்ற அனந்தமான அண்டகோளங்களினுஞ் சஞ்சரிக்கின்ற ஊர்வன பறப்பனநடப்பனவாகிய அபாத துவிபாத சதுஷ்பாதங்களையுடைத்தான சகலமான சீவகோடிகளும் அகிலசராசரங்களும். (கண்ணாட்டிற்காணாத மனமாட்டிற்கண்டபரம்) முகத்துக்கண்ணாற் காணக்கூடாம லகத்துக்கண்ணாற் காணப்பட்ட அரூப பராபர வாதிதற்பரமே. (நண்ணுமனினைவணங்கியென்பவமோ நமசிவாய) தேவரீரையண்டமாட்

டாமல் மிகுந்த பயபத்தியோடு மொடுக்கவணக்கத்தோடு மதிக
தாரமாய் நின்று இறைவனாகியவும்மை இறைஞ்சிப் பணிந்து
நித்தா நிதானா நிமலா நிரஞ்சனா நிரந்தரா நிரம்பரா நிராமயா
நிருமலா நிருநாமா நிரம்பரா நீதிபராவென்று நிகரில்லாதவுமது நிமலபாதத்தைநோக்கி ஆசையார்நேடி யன்பினூற்கூடி யா.
னந்தமாய்ப்பாடிவாழ்த்திவணங்கிப் போற்றிப்புகழ்ந்து தொழு
து தோத்தரித்து அர்ச்சித்தாராதிக்கின்றார்கள் என்றென்றுநிற்
குமேக கடவுளாகிய வுமக்கே நன்றென்றிதோபுரிந்தே னமல்
காரமே. - - - - - - - (௨)

சிற்றிறைவரிவ்வுலகுட் சிறியோரின்சிறுபொருளில் - ✻
வற்றிறையைவாங்குவரோ வல்லமையுமகிழ்ச்சியுள்ள - ✻
பற்றிறைவனீயிறையை வாங்காயேயானதினாற் - - ✻
சொற்றிறைவிட்டிட்டிறையைச் சொரிவேனே நமசிவாய. ✻

(சிற்றிறைவர்) தேவரீர் நித்தியமாக நிலைபெற்று நீடூழிகால
மிராச்சிய பரிபாலனம்பண்ணப்பட்டவெற்றியரசுற்ற நித்தனானை
யானுமக்குமுன்னே இந்தப்பூமண்டலத்தைக் கட்டியாளப்பட்ட
னப்படிப்பட்ட மாமண்டலேஸ்வர மகுடமன்னராயினும் அநித்தி
யராகையிற் சிற்றிறைவரென்னப்படுவார். (இவ்வுலகுட்சிறியோ
ரின்சிறுபொருளில்) இந்தவுலகத்துள்ளவிப்படிப்பட்ட இராசா
க்கள் தங்களுடைய வெளியப்பிரசைகளின் அற்ப பிரயோசன
மாகிய லவுகீகபொருள்களிலே.†(வற்றிறையைவாங்குவரோ) வலி
மைசெய்து இறையாகவும் பகுதியாகவும் தீர்வையாகவும் திரண்
ட கப்பமாகவும் வாங்கித் திரளாகச் செல்வங்களைக் குவித்துச்
சேர்ப்பார். (வல்லமையுமகிழ்ச்சியுள்ளபற்றிறைவனீயிறையை
வாங்காயேயானதினாற்) நிகரில்லாத சறுவ வல்லமையும் நிலைமை
பெற்ற பரமானந்த மகிழ்ச்சியுமுள்ள அன்பார்ந்தஇராசாதிராய
னும் இறைவற் கிறைவனுமாகியதேவரீர மேற்சொன்ன லவுகீக
பொருள்களாகிய பகுதிகளைவாங்கிக்கொள்ள மாட்டீராகையால்.
(சொற்றிறைவிட்டிட்டிறையைச்சொரிவேனேநமசிவாய) முத்
தொழிற்பகவா மூன்னூற்கேழ்வா மூவுலகாதாரா மூவுலகேந்தி
முக்குற்றங்கடிந்தோய் முழுதொருங் குணர்ந்தோயென்றும். சக
நாதா சகலவியாபி சயம்பு சர்வேசா சதானந்தா சச்சிதானந்தா
சுவாமியென்றும் - இப்படியு மின்னமநேகவிதமாயுந் தோத்தரி
க்கின்ற சொற்களாகிய பகுதிகளையுமக்குக் காணிக்கையாகக்கொ

டாமல் விட்டுவிட்டு என்னுள்ளத்தையும் அதிலிருக்கிற அறிவுமுத லான அந்தக் கரணங்களையுமே யகுதியாக வுமது பாதாபயுயத் திற்சொரிந்திடுவேன் - இப்படிசொரிந்து ஆசையாற்றேடி யன்பி னுற்கூடி ஆனந்தமாய்ப்பாடிவாழ்த்தி வணங்கிப்போற்றிப்புகழ் ந்துதொழுது தோத்தரித்து அர்ச்சித் தாராதிக்கின்றேன் என் றென்றுநிருமேக கடவுளாகியவுமக்கே நன்றென்றிதோ புரிந் தே னமஸ்காரமே. - - - - (௩)

வாய்மையொன்றுமாயையொன்றும் வாருளத்தில்வேறறியாய் *
நீயெல்லாமெல்லா நீ நின்னுளில்லாப்பொருளுமில்லை - *
நீயெல்லேயிருளேநீ நீயுயர்ச்சிநீயாழும் - - - *
வாயொன்றிட்டுலகெலாம் வணங்குகவேநமசிவாய. - *

(வாய்மையொன்றுமாயையொன்றும்வாருளத்தில்வேறறியாய்) தெளிந்தவுமதுதேவதிருவுளத்தில் மெய்யைப்பற்றியும் பொய் யைப்பற்றியும் வேறுவேறாக வித்தியாசங் கொள்ளாம லிரிடத்து மோரிடமாகவெழுந்தருளியிருக்கின்ற விறைவனே - (நீயெல்லா மெல்லாநீ நின்னுளில்லாப்பொருளுமில்லை) சூரியன் சந்திரன் கிரகங்கள் நட்சத்திரங்கள் முதலானவற்றின்விண்மண்டலங்களு க்கும், பூமி பருவதம் குன்றம் கல் மணல் முதலானதுகளையுடை த்தா யிருக்கின்ற பிறிதிவுக்கும், மழை வாருதி பூருணி கேணி வாரி ஆறுமுதலான வுதகங்களைக்கொண்டிருக்கிற அப்புவுக்கு ம், காஷ்டவெரிகரும்பெண்ணைமுதலானவற்றைப் பற்றி யெரிகிற வக்கினிச்சுவாலைகளையெல்லாமடக்கிக்கொண்டிருக்கிற தேயுவுக் கும், அந்தரம் பாதாளவந்தராளமெல்லாம் பாய்ந்துலாவிநிறைந் தளாவி நிற்கின்றவாய்வுக்கும், இப்படியே பிறிதிவு அப்பு தேயு வாய்வு ஆகாசமென்று சொல்லப்பட்ட பூதியங்களுக்கும், திரண பிரண முதலான துளிர்க்கிற தழைக்கிற புஷ்பிக்கிற காய்க்கிற கனிக்கிற விருக்ஷவினங்களுக்கும், நடக்கிற பறக்கிற நகருகிற நீந் துகிற விலங்கு பறவை பூச்சிப்புழு மச்ச முதலாயின்னம் வெகு விதமான ஜீவகோடிகளுக்கும் வகைவகையான மனுக்குலங்களுக் கும் வானோர்கணங்களுக்கும் எல்லாப்பொருளுக்கு நீர்தாமேயா தாரமாகவு மாதியு மந்தியுமாகவு மனைத்துமாகவு மிருக்கின்றீர். ஆதலாலிவையெல்லாமென்னுகையிலிவையாவு நீர்தாமே - இவை யெல்லாமும்மாலுற்பவிக்கப்பட்டும்மிலிருந்தும்மிலொடுங்குகிற படியாலும்மிடத்திலில்லாதபொருளொன்றுமில்லை - (நீயெல்லே

யிருளேநீ) ஆகாசமெல்லாமேகமாய் விளங்கி யளவில்லாத கிரண
பாணங்களைவிடுத்து அந்தகாரங்களை யண்டவொட்டாமலறுத்து
அணியணியாக வானத்திலுள்ளசகலசோதிமண்டலங்களுக்குமிந்
தப்பூமண்டலத்துக்கும் பிரகாசத்தைத்தரும் எல்லீசனென்னப்
பட்டசோதிராயனான சூரியனுண்டே இந்தச்சூரியனைப்போலே
மேகங்களால் மறைபடாமலும் விரிந்த கடலிலே மூழ்காமலுஞ்
சூரியனுக்குட்சுடராகவும் உயிர்ச்சுடராகவுந் துளங்கிப்பிரகாசிக்
காநின்ற துங்கவொளியே-அமிர்தம்போலே வெண்மையொருந்
தி யலங்கிர்தமானகுளுங்கதிர் வீசுஞ் சந்திரனுண்டே யதைப்
போலக் களங்கமில்லாம லதின் றண்ணொளிவுக்குந் தட்பத்தைத்
தருமதிசீதளமானதயானந்தவொளியே-அடர்ந்த காஷ்ட வெரி
கரும்பெண்ணைமுதலான கருவிகளைப்பற்றிக கதங்கொண்டெரி
யுமக்கினியுண்டே யந்த வக்கினியைப்போல அடுத்த பொருளை
யழித்துப்போடாம லக்கினிசுவாலைக்கு ஆதாரயான வலங்கார
வொளியே சகலமான ரத்தினங்களுக்குள்ளே பிரகாசிககாநின்ற
வொளிவைப்பிறப்பிக்குமொளியே-முகத்துக்கண்களுக்குள்ளிரு
க்கிற வொளிவுக்கு மூலமானவொளியே - அகத்துககண்களுக்கு
ஞானப்பிரகாசத்தைத்தந்தருளு மறிவானந்தவொளியே- இப்ப
டியே சொல்லவொண்ணாத சுபசோபித வொளியலங்கார அனந்
தகாரணமான செகச்சோதியா யிருக்கிறதுமன்றி அகத்துக்கண்
கொண்டும்மை யறியாத வஞ்ஞானியர்க்கு அந்தகாரமான விருளு
நீர்தாமே (நீயுயர்ச்சிநீயாழம்) பூமண்டலத்துக்குச்சந்திரமண்ட
லம்-௨௰௬-லக்ஷத்து-௭௰௯-யோசனை தூரமுயர்ந் திருக்கிறதெ
ன்றும், நட்சத்திரமண்டலத்திலிருந்து பூமிக்கிறங்குகிற தெவ்
வளவோ ஏறுகிறதற்கும் அவ்வளவு தூர வுயரந்தானென்றும்,அந்
தச் சிகரத்திலிருந்து பரமண்டலத்தி னடிவாரங் காணவேணுமா
னாலிதிலு மதிகமான தூரவுயர்ச்சியா யிருக்கிற தென்றுஞ்சொல்
லப்பட்டிருககின்றபடியால் தேவரீரெங்கும் வியாபித்திருந்தாலு
மெல்லா மண்டலங்களுக்குமே லெழுந்தருளி வீற்றிருக்கின்ற
வுமது பரமானந்த திருமுகமண்டலவிலாசம் பிரத்தியக்ஷமாய்
க்காணப்படுகிற மோக்ஷப்பிரதாப மண்டலத்தினுடைய வுயர்ச்
சி யெவ்வளவென்பேன்-இப்படிப்பட்ட வுயரங்களை ஆமென்றரு
ளிச்செய்தவுடனே யடுக்கடுக்காக நிமைப்பொழுதிலே படைத்
தருளாநின்ற எண்ணவொண்ணாவுயர்ச்சியே-எமதறிவுக்குமிமை
யவரறிவுக்கு மெட்டாத வுயர்ச்சியே -இத்தன்மையேயளவிடக்

கூடாத பாதாள வந்தராள வாழுங்களுக்கெல்லா மாதாரமாயாழ்ந்திருக்கின்ற அடிமுடியில்லா வாழ்வே. (நாயொன்றிட்டுலகெலாமவணங்குகவே நமசிவாய) உலகங்களெல்லா மொருங்குடன் கூடி யொருவராய்ப்பட்டார்போலே கோபித்து ஏக கோஷ்டத் துதி யொலிமுழக்கமாய் அச்சயா அதிகுணா அறுகுணா அதுலா அபயா அமலா அனகா அனங்கா அனந்தா அனந்தலோசனா அறவாழிம்வந்தா அறவாழியந்தணா அகண்டாகண்டா வென் றுமது அமலபாதத்தை யர்ச்சனைபண்ணியும், பரமே பரமமே பரப்பிரமமே பராபரமே பரஞ்சோதியே யென்றுமது பாதாம்புயத்தைப் பயபத்தியோடுபணிந்து வணங்கியும், ஆசையாற்றேடியப்பிறகூடி ஆனந்தமாய்ப்பாடி வாழ்த்திவணங்கிப்போற்றிப் புகழ்ந்து தொழுதுதோத்தரித்து அர்ச்சிததாராதித்து வணக்கஞ் செய்யக்கடவாய் என்றென்று நிற்குமேக கடவுளாகிய வுமக்கே நன்றென் றிதோ புரிந்தே னமஸ்காரமே. (௪)

யமன்வருங்காலம்பொறிபு மியாதனையைப்பொறுக்காமைச் *
சுமத்தினைப்போன்றுன்மலர்ந்த சுருங்குயிருமலரடங்கி - *
கமலததிலதிர் துளிநேர்கவலையி னூற்குலைந்தயர்க - - *
வமருளத்திலமர்தனுக்கே யமைந்தாடு நமசிவாய. - *

(யமன்வருங்கால்) அகோரமானவற்றிற் கெல்லாமிக்க வகோரமான யமனென்னுஞ் சாவானது வருமென்கிற தெவ்வளவு நிச்சயமா யிருக்கின்றதோ அதுவருகின்றகாலமு மிடமுங்காரணமு மின்னதென்றறியக்கூடாம லவ்வளவு நிச்சயமில்லாமையதனோடு கூடவிருக்கின்றது- அதெப்படியென்னில்- இளமையிலோ பாலியத்திலோ மூப்பிலோ உண்கையிலோ உடுக்கையிலோ படுக்கையிலோ நடக்கையிலோ ஓடுகையிலோ பாடுகையிலோ எந்தச் சமயத்திலோவரும்- நாட்டிலோ வீட்டிலோ காட்டிலோ கடலிலோ கரையிலோ வழியிலோ தெருவிலோ திண்ணையிலோ எந்தவிடத்திலோவரும்-சத்துருவாலோ மித்திரராலோ பசியினாலோ அசீரணத்தினாலோ சலிப்பினாலோ சந்தோஷத்தினாலோ பட்சத்தினாலோ பகையினாலோ வியாதியினாலோ விஷ செந்துவினாலோ வாந்தியினாலோ பேதியினாலோ என்ன காரணத்தினாலோ வெப்போதோ எங்கேயோ வெப்படியோவருமே- அதுவருகிற காலத்தி லொன்றும் பாராம லனைவரிடத்தும் வந்து யாவையும் நிர்மூலமாக்கும்-உலகமெல்லாங்கட்டி யொருகுடையிலாண்

டு மணிமகுடம்பூண்டு ரதகஜ துரக பதாதிகளென்று சொல்லப்பட்ட சதுரங்கசேனைகளையுங்கூட்டி யாவராலுமெதிர்க்கக்கூடாத பலமான அரண்களையும் பூட்டி எஞ்சாத தைரியத்தோடுமஞ்சாத நெஞ்சதகோடு மிருக்கின்ற மண்டலேஸ்வர ரிடத்திலும் வரும்-மகாயூகிகளான தந்திரோபாய முள்ள மந்திரிக ளிடத்தும் வரும்-மகாவீர வைராக்கியமுள்ள படைகளைக்கொன்று பலவெந்றிகொண்ட படைத்தலைவரிடத்தும்வரும் மலையினின்றோடுமாறுகளைப்போல மதுரமான அரிய கவிபாடவல்ல சூக்ஷியின் பெரிய மாசூக்ஷிமையுடைய புலவரிடத்தும் வரும்-சகலசாஸ்திரங்களைக்கற்ற சாமர்த்தியரிடத்தும் சகலசம்பத்துகளையுடைய செல்வ சம்பன்னரிடத்தும் சாதுரியமான மாதுரிய ரிடத்தும் சமுசாரிகளிடத்தும் சந்நியாசிகளிடத்தும் தவமுனிவர்க ளிடத்தும் இல்லாரிடத்தும் வல்லாரிடத்தும் எல்லோரிடத்தும் வரும்- இப்படியே யமனாகிற கொடிய சாவுவந்தணுகின காலத்தில் இராசாங்கமுமெழிலுமுயர்றவீரியமும் இருமையுர்றபிரபுத்துவமும்எங்கும் புகழப்படுங்கல்வியும் ஏராளமான செல்வமுமழகும் அவலக்ஷணமும்பெருமையுஞ்சிறுமையும் மானமும் ஈனமும் பகையுஞ்சிநேகமும் பாடலும் ஆடலும் இவையாவுமூற்றும்பற்றறவற்றுப்போமே-இவையெல்லா மிப்படிப் போகிறதல்லாமல். (ஐம்பொறியுமியாதனையைப்பொறுக்காமை) மெய் வாய் கண் மூக்கு செவியென்றுசொல்லப்பட்ட இந்த வைம்பொறிகளிலே தோற்றினதெல்லாமிச்சித்து சுகித்தமெய்யும் சுவையுள்ள பதார்த்தங்களைப் புசித்தநாவும் சுந்தர சித்திரவிச்சித்திரமாய்க்கண்டுகளித்தகண்ணும் சுகந்த பரிமளங்களைமுகர்ந்த மூக்கும் துங்கசங்கீதங்களைகேட்டசெவியும் இன்பசோதனைசெய்து சுகித்ததெல்லாம்போய் துன்ப யாதனைமிகுத்து சரீரத்திலுள்ளவிரத்தங்கொதிக்க அல்திசனுக்குள்ளிருக்கிற வழுக்கள்சண்ட நாடி விழுந்துபோக நரம்புதசையெலும்புமுதலானதெல்லாஞ்சுருங்க நாக்குதோஷித்தால்வரள கண்பஞ்சடையமூக்குநழுவ காதடைக்க கன்னமொட்ட உதடுவெளுக்க பற்கறுக்க சிலேஷ்டுமம் நெஞ்சிற்கறுகுறென்று நிற்க இன்னம் வெகுவித வகோரங்களெல்லாமேலிட்டுச்சாவுவந்துநேரிட்டபோதுவருத்தவேதனையையும் உருத்தயாதனையையும் பொறுக்கமாட்டாமல்.(சுமத்தினைப்போன்முன்மலர்ந்தசுருங்குயிருமலரடங்கி)சுகந்தபுஷ்பங்களைப்போலச் சுந்தரவடிவமாய் முன்னலர்ந்திருந்த வாத்துமாவானது மிகவுஞ்சுருங்கி

நெருங்கி வாடி வதங்கியொடுங்கி யடங்கிப்போய்.(கமலத்திலதிர்துளிநேர்கவலையினாற்குலைந்தயர்க)தாமரையிலையிற்றண்ணீர்துளி ததும்பினாலெப்படியோவப்படிபோலச்சஞ்சலமிகுந்துதைரியந் தளர்ந்து மெத்தஆராட்டமும்புத்திமாறாட்டமும்பெருகிககருத்துகளைந்து கவலையிற்குலைந்து கனமானஅவஸ்தைப்படும்பொழுது·(அமருளத்திலமர்தலுக்கேயமைந்தாடுநமசிவாய) நெஞ்சமே யிந்த ஆராட்டமான போராட்டமெல்லா மமர்ந்து அநித்தியமான கவலையை விட்டு நித்தியமான நிலையையடையும்படிக்கேநிச்சயித்து நம்பி ஆதிபரா அநாதிபரா அனந்தாதிபரா சுயம்பர பரா வென்று சுவாமியைத் தியானித்துத்தோத்திரஞ்செய்து ஆசையாத்தேடி யன்பினாற் கூடியானந்தமாய்ப்பாடி வாழ்த்தி வணங்கிப் போற்றிப் புகழ்ந்து தொழுதுதோத்தரித்துஅர்ச்சித்தாராதித்து வணக்கஞ்செய்யக்கடவாய் என்றென்றுநிற்குமேக கடவுளாகிய வுமக்கே நன்றென்றிதோ புரிந்தே னமஸ்காரமே. (௫)

முற்றிற்று·

## தேம்பாவணிப்பாடல்.

இன்னவாயிலின்னதன்மையின்னயாவுமாகையிற் - *
பொன்னநாடுதன்னாறும்பர்பொன்னாருக்கோடாங்குபோய் *
மின்னனேருமங்கையீன்றவேதநாதனைத்தொழ - *
வுன்னலாதகோவரின்பமுண்ணவுற்றழைத்தனர். - *

உரை—முற்சொன்னகுகைக்குள்ளே யிதெல்லாமித்தன்மையாலாகையில் வானுலகில்வாழும் வானோராகிய ரூபத்தையெடுத்துக் கொண்டுபோய் மின்னலோடொத்த கன்னித்தாயீன்ற வேதநாதனைவணங்கவரச்சொல்லி நினையாத முறையாலிடையரின்பத்தையுட்கொள்ளவங்கேவந்தழைத்தாரென்க. - - *

மாலைமேவுவேங்கைபற்றிவண்டுணாததென்மன - - *
மாலைமேவுவேங்ஙைபற்றிவண்டுணாததென்மன - - *
மாலையாகவீங்குவந்துவாசமாருமுல்லையார் - *
மாலையாகவீங்குவந்துவாசமாருமுல்லையார். - - *

உரை—சாயுங்காலத்தில்மலர்ந்தவேங்கைமரத்தைப்பற்றியம்மலை வண்டுண்ணாததுபோல மனமயக்கத்தைச்செய்யும் பொன்னைப்பற்றிவருங்குற்றங்களையிடையர்மனத்திலேகொள்ளாதகுணத்தினால் மிகவுமுவந்து மணக்குமுல்லைப் பூமாலைகளைக்கொண்டிங்கேவந்திடமெல்லாம்நிறைந்தாரிடையரென்க, - - *

சர்வேஸ்வராய நம.

# திருக்காவலூர்க்கலம்பகம்.

## காப்பு.-கட்டளைக்கலித்துறை.

பாற்கடற் கன்னிச்சங் கிங்க ணரிதிற் பயந்தளித்த..... .....*
மேற்கடற் றேவ திருமுத்தம் பூண்டு விரிதமிழ்ப்பா... . ......*
நாற்கடற் றொல்லந் துறைசேர்ந்து காவலூர் நங்கையெனு ..*
ஞாற்கடற் றேவமுத ளினி நுகர்வ னுவன்றிடவே...... ...*

## மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

(நான்கடித்தரவிரண்டு.)

பார்மேவும்பழிநீப்பப் பகர்ந்தடங்காப்பரிவுள்ளிச்...*
சீர்மேவுந்திருவுளத்தைத் தெளிந்தமராருளம்பணிப்ப..*
வுருவில்லானுருவாகி யுலகிலொருமகனுதிப்பக்......*
கருவில்லாக்கருத்தாங்கிக்கன்னித்தாயாயினையே..... *
விண்ணுலகம்புகழ்ந்தேத்தி வியந்தலர்சேவடிவருட *
மண்ணுலகந்துயர்நீங்க மன்னுயிர்கள்சிறந்துவப்ப...*
வான்றளங்கள் புறங்காப்ப வானரசர்பணிகேட்ப....*
மீன்றளங்களணிமதிபோல்விண்ணரசாளாயினையே....*

(நான்கடித்தாழிசையாறு.)

தண்சுடர்க்கால்மதிக்குழவி தாங்கியபூவடிவிளங்கத்..........*
தெண்சுடர்க்கானுடுவணைந்த திருமுடிகொள்சிரமிசைப்பப்.. *
பனியுயிர்த்துமணங்குளிர்க்கப் பரிதியுடுத்துடலிலங்கத்.....*
தனியுயிர்த்துமரசணியாத் தரிப்பதுநின்விருதாமோ........*
கனைபூத்தசோணாட்டுக் காவிரியின் வடகரைமேற்...........*
சினைபூத்தநிழற்பொழில்வாய்ச் சிங்கநெடுங்கொடிநிழற்றுந்...*
திருக்காவலூரகத்துத் திகழொளிவாய்மணிக்கோயி..........*
லருட்காவலியற்றிநம்மை யளிப்பதுநின்றனையயாமோ.. .. ...*
உள்ளுருவாக்கவசமென வுத்தரிகத்துடன்மருமேர்...........*
தெள்ளுருவாமணிமாலை சிறந்தேந்துங்கைநீட்டி ..........*
வாய்பொய்யாமறைத்திசையாம் வடதிசையேதனிநோக்கித்...*

தாய்பொய்யாவடைக்கலமே தருவதுநின்புகழாமோ..... ..*
கான்பொதுளும்பூம்புகையுங் கமழ்பூவுமணந்தேங்க........*
மீன்பொதுளுமொளிமணியார் விமானத்துளெழுந்தருளிப்..*
பார்பூத்தவினையறநீ பயந்தநலத்திவ்வுலகுஞ்..... .... ...*
சீர்பூத்தவாறெழுப்பச் செய்வதுநின்சிறப்பாமோ. ........ *
தாண்மலரோ தலையரும்பத் தரும்பணிகேட்டுளம்பணிப்பச்.. ..*
சேண்மலரோயுன்வரத்தாற் றிருக்கடலூடினிதாழ்ந்து..........*
வானவருங்களைகாணு மனந்தேற்றுப்புல்பாவா... ... ..*
லீனவருள்யானீந்தற் கியைந்ததுநின்றிறமாமோ.........*
யாழ்குரலேயினிதென்றுவீன்றுடகேதன்மகன்சொற்.. .. ..*
றாழ்குரலேயினிதென்ற தகைமைத்தோமனதிரங்கித் .. .... ..*
துவர்வாய்ப்பொங்கலைமணிபோற்றொடர்புளதாய்நீயென்ற ..*
னுவர்வாய்ப்புன்புகழுரைகொண் டுவப்பதுநின்பரிவாமோ.... *

(ஈரடி அராகம் நான்கு.)

உயருலகடிதொழ வுயிரினுமுவகையே..........*
துயருலகுளியுள துகளொழியுறுதியே. .........*
யுலகினையருளிய வொருவனையருளலி.......... *
னலகினையறவர மமைதனியரசினை...........*
வினையிடுமிருளற வெயிலிடுமறையினை..........*
முனையிடுபகையற முயலிடுமுடலினை.......... *
மறையருளிறைவனை மறைவிலவருளினை ........*
யிறையருள்கதியினை யினிதருடுணையினை........*

(ஈரடித்தாழிசையாறு.)

ஆதியிலாவந்தமிலா வனைத்துயிர்க்குங்காரணற்கே.........*
யோதிலெல்லாநிகர்கடந்த வுற்பத்தியாயினைநீ...........*
பூவாதிமூவுலகின் புலத்தடங்காவனையொழிக்குந் ........ *
தேவாதிதேவனைநின் றிருவயிற்றிலடக்கினைநீ. ..........*
வானவர்க்குந்தெளியாத வடிவொளியான்வினையிருணீத் .. ..*
தீனவர்க்குந்தெளிவதற்கே யென்னுருவொன்றாக்கினைநீ......*
மூவுலகுமூவிரலான் முகந்தேந்துமுதலோனைத் ....... ....*
தேவுலகும்வியந்திறைஞ்சச் செங்கரமேலேந்தினைநீ..........*
பொருள்சுரந்தீனுயிர்க்கெல்லாம் பொழிந்தூட்டிவளர்த் தோனை
யருள்சுரந்ததிருக்கொங்கை யமுதூட்டிவளர்த்தனைநீ.... ...*
யனைத்துலகுமேவலைக்கொண் டசைத்ததனியாணையினு.......*
னினைத்துலகும்வியப்புறவிந் நிலத்தேவல்கொண்டனைநீ .... *

(பல்வகைஅம்போதரங்கம்.)

உந்தைதயையீன் றநீ யொருவர்க்கிங்கரும் .... *
வந்தையோடன்னையு மகளுமாயினை . ..... *
கனியரும்பயனொடு கலந்தபூவினைத் ...... *
தனியருள் கல்வியுந் தாயுமாயினை ...... .. *

வேறு. தொற்பழியுரகமிறுத்தனை தகட்பழியுலகிறுடைத்தனை. *
கற்பழியலகையடக்கினை கதிக்கதவகலவியக்கினை .. .....*

வேறு. விண்டிறந்தனை யெண்டிறந்தனை . . *
பாணணிந்தனை பீனணிந்தனை .. .....*
மதிபதத்தினை கதிபதத்தினை ...... ...*
யருள்வலத்தினை பொருளிடத்தினை ... *

எனவாங்கு தனிச்சொல் (இனி-அகவற்சுரிதகம்.)

தண்டிருக்காவலூர்த் தடம்வளர்ந்தொளிபெற .....*
மண்டிருமலரடி வைத்தபின்னெங்கணும் ........ *
வினையிராப்பாந்து விளைந்த வவாவிரு .......... *
டனையிறமறையொளி தருந்திருப்பகலோன் ..... ..*
வந்துயிர் விளக்கவருநாளிதுவென........... .... ..*
நந்துயிருய்ய நகைக்கதிர்பரப்பிக்........ ......*
கொதித்தனைத்திருளினைக் கொய்திங் ............ *
குதித்தனை நீயோருதயமீனே ................ (க)

(நேரிசைவெண்பா.)

மீனேதலையரும்ப வெண்மதியேதாளரும்பப் ... *
பானே யுடலரும்பப் பாங்குருவைத்—தானே .. *
ருடைத்தா டிருக்காவ லூரகத்து வைத்தா .... .... *
டுடைத்தாள் வினைத்துயராத் தொக்கு......... (உ)

(கட்டளைக்கலித்துறை.)

தொக்க நலமெலாம் பெய்திடி யாதரு டோய்முகிலாய்ப் *
புக்க நிழல்கொண் டிருள்புக விற்பொழிற் பொங்கலைநீ *
றொக்க வனையா வரங்கொண் டுவகில வோர்நிலையா .. ..*
யக்க மகிழக்கண் டேன்றிருக் காவலூ ரங்கனையே .. (௩)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

அங்கனைவருமருமறையறையயிர்வனவிளியுளமுயிருணவைனயயி
யக்கினைபொய்மையைவிலக்கினைமெய்மையைவிளக்கினை.யொளிமேவந்தே.
இங்கனைவருமருமிடிமடிவிழிவெழு துயரயொழிகுபவின்பமு

யிர்த்தனை றன்பமொழித்தனையிம்பர்களித்தனை—யுயிரீடாய்ச் *
சங்கனையனநின கரமிகுவனவின மணியணிகுவரவர்தாவருநேரா
யறமேவருமானுற யாவருநேரிற—வாழ்வாரால்...... ....*
பங்கனையனநின திருதிரு வடிசிர மடியனமணிகுப பாவிகளண்
டினை காவலிலொன்றினை மேவியுமுன்றனைக்—காட்டாயோ. (௪)

(ஆசிரியவிருத்தம்.)

தனைக்காட்டத்தன்றிறஞ்சீர் தயைஞானமற்றருந்தன்றகுதிகாட்டத்-தகும்வழியாற் றகாச்செல்வோனுனைப்படைப்பக் கருதிப்பின் றாணியெங்கு—முனைக்காட்டவிரவிமதியுடுவினங்சணவமணிமற்றொளியின்சால்பு-முரிமணமே வகைமலர்ப்பூவொன் கனிதேனமுதின்மையுகுத்தயாவு — மினைக்காட்டப்பெய்தமுகில் வியன்கடனீரீதழகுவேய்ந்தவெல்லாம்-விண்ணிடத்து மண்ணிடத்தும் விருப்பங்கொண்டுனையுள்ளிவிதித்தானன்றோ—நினைக்காட்ட வெழில்காட்டுமிவைகண்டுன்னடி.தொழுநானிறையவாழ-நினைக்காட்டாயோமரியே திருக்காவலூர்நிலையே நிமலத்தாயே...... ..(௫)

(கட்டளைக்கலித்துறை)

தாயுனைக்கொண்டானனைத்தும்படைத்தவொர்தந்தையனல் *
காயெனப் பூவெனத் தன்றிரு மாட்சியைக் காட்டுவபோற்...*
சேயுனைக் காட்டலி லிவ்வள வன்புகழ் செப்புவரா .......*
ரோயில காவலிறைவிபொரு மென் னுளாவெளிறே.....(௬)

(புயவகுப்பு- ஆசிரியவண்ணவிருத்தம்)

வெளிமதிகதிருடுக்குல-மணிநிதியொளிமுகத்தவை-மலர்கணிடசிதுமற்றைய -பலவுலகுளவனைத்தையு — மீறிலாதெங்கணு மருளிப்பயந்தன, வெளியமைசுரர்முதற்பல-வினையமைநரரினத்தொடு-விரிபலவுலகனைத்திலு-முளபல வுயிரனைத்தையு— நானுமாறின்றியரிதுயிர்த்தமைந்தன, வினைவிளைபுவிபகைத்தன-முழுதுவதுக்டைத்திட- விரிமுகிலிடியிடித்தரி-துயர்மலைமுடியொளித்திட—மாரிமாறாதிவ்வுலகிற்பொழிந்தன, விரவிய விரகமுற்றிய -வினையொடுவெகுளியற்றிய-வழலெழுமுகிலியற்றிய- சுடுமெரியுலகழற்றிய—மாரியாலெட்புரமெரியச்சினந்தன ........ .. ..*

தெளிமறையவர்செலப்பிரி-கடலிருமதிலெனக்கடி-திருபுடையெழநிறுத்தின-நிலையெழுதிரைகவிழ்த்தெதிர்-நேரலார்நைந்துயிரொழிபக்கடிந்தன, திகிரியதுயர்குவட்டிழி-திரைநிலையுற நிறுத்துபு-மலைமிசையலையடுக்கென-வலமிசையலையடுக்குப - யோருடா

னுநதி

நடைதடுத்துயர்ந்தன, செருமிகுசெறுநர்மொய்த்துறை-முகிறவழா ண்மதித்துயர்- பொடியெழவடிபெயர்த்தொரு- படையிலநகர்தகர்த் திரு — ஞாலமேயஞ்சமிகுகத்ததிர்ந்தன, சிதைவழிசிதைசினக்கர-ணரசுடனுயிரறப்பல-கரிபரியலறுப்படி-யுறழவுமடயர்முற்றுறு— நூறுநூறன்றொழியவதைத்தெறிந்தன..............................※

ஒளியெழுமுருணடத்தின- நிலையுறவுருணிறுத்தின -பிறகுறவுருளி ழுத்தன-பகலிடையுருளொளித்தன —மாயிராவென்றல கிருளக்கர ந்தன,உயரியவரைமுகட்டிடை-யழலெழவிடிமுழக்குட-னதிர்வனவுல குவப்புற-விருசிலைமிசைதிருத்திய—வேதநூலன்புடனெழுதிப்பரந் தன, உலகுயிர்களியவொத்துரு - வுடலுறியடைசயக்கொடி - யென வொருசிலுவைநட்டிட-வுயர்மலைமுகடெபற்றுஎி—வானுளோரஞ்சிவெ ருவுறச்சிவந்தன, வொருவிலபடையெனப்பொறை - யொருபொழு தெமதுயிர்ப்பகை-யெனமுகிவிலவுடற்றிய - வெறியினமுழுதடக்கிய — வாகையேகொண்டிட ருலகிற்பரிந்தன .........................※

களியறவுடலுணக்கிய-பிணியறமிடிபெருக்கிய- துயரறவினையியற் றிய - குறைப்றவரிதியக்கிய — வீரவாயுண்ட புதுமையிற்சிறந்தன, கடிதெழுவளிபடக்கின-பகமலைபுவிநடுக்கின- பகலிடை வெளியிருட் டின-கனல்குளிரிடநிலைத்தன — நீருமாயைந்தையு மரிதிற்புரந்தன, கதிபெறுமறையுரத்தொடு - கொடையருடவநலத்தொடு - பொறை துணிவறவயத்தொடு-பொருணயநலமனைத்தையு—ஞாலமீதெங்கணு மலியப்பயந்தன, கசடிடர்முழுதொழிப்பன-வொழிவிலகனியுயிர்ப் பன-நரககல்கதவடைப்பன-கடையிலகதியிலுய்ப்பன— காவலூரநங் கனேமகன்றன் புயங்களே ........................................ (எ)

(தவம்- கட்டளைக்கலித்துறை.)

புயங்க வுருவால் வினைநஞ் சுமிழ்ந்து புழுங்கியபே. . . .※
யுயங்க மிதித்துத் தவத்தால்வென் றுயென வொண்மதிய※
மயங்கார் பகையினுக் கஞ்சிவந் துன்றவ வாகையிற்றுன்※
முயங்க வடைக்கலங் கொண்டதொர்காவலூர் மூதுயிரோ※ (அ)

(நேரிசைவெண்பா.)

உயிராந் தயையாளை யோம்பனந்தத் தாளை.................※
யயிரா மறைமொழி யாளைப் — பயிராருஞ்.................※
சிந்துசேர் காவலூர்ச் சேர்ந்தாளைப் பாடினே................※
னிந்துசேர் தாடசேர யான்................................(௯)

(கலிநிலைத்துறை.)

யானரும்பும்பதத்தழகி மதியரும்பும்பதத்தழகி யினியவில்வாய்ப்.*
பானரும்பும்படத்தழகி தேனரும்பும்பதத்தழகி பகலிற்றெல்கா.*
மீனரும்புஞ்சிரத்தழகிவிண்ணரும்புஞ்சிரத்தழகிவிரிவான்வீட்டைத்
தானரும்புமுகத்தழகி தயையரும்பக்காவனலூர் தங்கினளே....(ய)

(தாழிசை.)

தங்கடேக மதங்கடூர மறங்கடேயுக தாழ்வெலா........*
மங்கவேத வறங்கடேற மனங்கடேர வழங்கிவா........*
ணங்கிலாப மடைந்துவாழவடங்கல்லேதிருக்காவலூர்....*
நங்கைசேவடி நம்பிநாளு நயந்துளுகு நாடியே.(யக)

(வஞ்சிவிருத்தம்.)

நாடிய மேற்கதி நலங்காண....*
வாடிய தென்னுள மலிநெஞ்சே*
தேடி யணங்கறு திருக்காவற்...*
பாடிய ணங்கடி பணியாயோ...*(யஉ)

(காலம்-ஆசிரியவிருத்தம்.)

பணியாதகாமமுதிர்வேனிற்காலம்பட்டாற்றுதழுங்கட்கார்காலமாகிக்
கணியாதநரகச்சமுகுக்குங்கூதிர்க் காலத்துண்ணடுங்கியபின் வினையு
நோயுந் - தணியாதபனிமுன்பின்காலமும்போய்த் தவஞானம்பூப்ப
விளவேனிற்கால - மணியாததிருக்காவலூராளன்னை யடிக்கடிமைப்
பட்டுற்றகாலமாலோ.......................................(யங)

(இடைச்சி-ஆசிரியவிருத்தம்.)

மாலுருத்தசெஞ்சொல்லிடைச்சியேவாயமிர்தமோடெய்தலுள்ளியே
பாலுநீருநால்வாயமிர்தெனுப் பால்கலந்தநீர்விற்பவெய்தினய்....*
நீலமுண்டநின்கண்ணிலொன்றுமெய்ந் நீர்மையன்றியிங்குன்பொய்
செல்லுமோ - சீலவன்னம்மாள்காவலூரிலேசேர்ந்தபாலினீர்தோன்
றிநாணுவாய்..........................................(யச)

(மறம்-தாழிசை.)

நாணிபூட்டிய சாபமேந்திய வீரவெங்கர வேடனர்...............*
நாணவுட்சுடு தீயசொற்கொடு நம்மையெள்ளின ராரடா....*
சேணிபூட்டிய கொம்பரேந்திய தேறலூட்டிய காவலூர்ச்.......*
சீரினொளொரு தேவமாதொரு சீயமேகரு வுற்றகாற்.........*
யாணிபூட்டிய வெங்கடார்மலை பற்றியெங்குடி லெய்தினர்......*

பாதமூன்றிய வாயிருமுனை பூத்தகாடென வாயடா .........※
தூணிபூட்டிய வம்புபோலவள் புக்கசிற்றி லலர்ந்தபூ ...............※
தூயதேனுக வின்னும்வாடில சூழ்ந்துவாழ்த்திட வண்டரோ※
(வஞ்சித்துறை.) (௰௫)

வண்டிமிரும் வாய்மலர்க்காக்..........※
கண்டிமிருங் காவனலூர்ப்............※
பண்டினிதாள் பாவைபணிந்.........※
தண்டினரோ யண்டரோ. ......(௰௬)

(கட்டளைக்கலித்துறை,)

அண்டவெள் ளம்புலி யேந்த வரக்கவி ழம்புயத்தாள். ..............※
கண்டகண் விம்மிதங் கொண்டிமைப் பாமொர் கதிர்க்கலையாள். ...※
விண்டவழ் மீன்முடி யாடிருக் காவலூர் மேவரசாண்...............※
மண்டழ குண்டக ளும்பர்க ளென்று மகிழ்வனவே............(௰௭)

( ஆசிரியவிருத்தம். )

மகிழாருலகி னணுகார்கதியின் மடிவார்துயரி லருளாருன்றாட். ....※
புகழாதவரோ பணியாதவரோ புடைநீகாவா துய்யாவுயிரோ .........※
திகழார்மணிபோ லணிபூஞ்சினைக்காத்திருக்காவனல்லூரேர்ந்தவரோ
நிகழாவருளு மிகழாமருளு நிசியற்றுயிரோ விளங்கும்பானே. (௰௮)

(தாழிசை.)

பானெழிபூம்பொழினீழலே பாவொளிபுட்குரலோதையே.......※
தேனிழிமும்மலர்வாசமே சேர்ந்தணிசெய்திருக்காவலூர். .........※
வானிழிந்திங்குறவும்பரும் வானுறவிம்பரும்வீதியாய் ... .........※
மீனெறிலூர்சிரநாயகி வீற்றிவணெய்தியகாலையே ............(௰௯)

(ஆசிரியவிருத்தம்.)

காலையொடு மாலைவிதூ வொத்திருள் கெடுத்தருள் கொடுத்துயிர் களி
த்தனன்றே- சோலையணி காவலினள் கோவிலினள் சோதிமடிசோம
னடி தாளமுடியாள்- வேலையலை வற்றினு மிடற்கனல் குளிர்ப்பினும்
விரிச்சிக னிருட்டிடினுநான்-மாலையிரு டிங்களொரு பாதியிரு பாத
மொரு வாதவிரு மாலையொருவேன்.........................(௨௰)

(கைக்கிளை - கட்டளைக்கலித்துறை.)

ஒருவாதிங் காள்குளிர்ம் பூந்தா ளணிந்தா ளொருகலையாய்த். ... ※
திருவாய் முகமொத்தா யார்ந்த கலையாய்ச் செகங்குளிர்க்குந்.....※
தருவாய் நிழற்கா வலூர்வதிந் தாயினித் தான்சுடவோ.............※
மருவாதெக் காலமு மிங்கிலைக் கைக்கிளை மாலையதே ........(௨௧)

(மடக்குத்தாழிசை.)

மாலைவாங்கவந்தனன் மாலைதந்துபோயினன். ................*
மாயமாறவந்துதான் மாயமேறியேகினன். ............*
வேலையுண்டமாண்டருள் வேலைநல்கினன்கையில் ............*
விண்டுயிர்த்துமீண்டடி விண்டிலூன்றியேறினன் ......*
பாலைபுக்குநோற்பகை பாலைநீக்கிநோற்றனன்..............*
பாசம்வீக்குபாசமாய்ப் பாசமாய்ந்துமாய்ந்தனன்....*
காலைவேந்தனொத்தநின் காலையாரறிந்துளார்.. ...............*
காவலார்ந்தகாவலூர்க் காவலாயகாந்தையே.......(உஉ)

(வண்டு-நேரிசைவெண்பா.)

காந்தட்கை கஞ்சத்தாள் காவிக்கண் ணாம்பல்வாய்.......*
வேய்ந்தலர்ந்த காவனலூர் மென்கொடியே— யீந்தமது*
வுண்ணளிகாள் சொன்மினீ ரொத்துளதோ பூவுலகிற்....*
பண்ணளிபுந் தீந்தேன் பனித்து ..................(உங)

(நேரிசையகவல்.)

பனிமதுப்பாதுமந் தனிகன்மறந்து ............*
குனிமதிப்பிறைமேற் கொங்குமிழ்ந்தலரவுந் ....*
தொல்லையந்தற்பகை யொழிந்துசூடொழிந்......*
தெல்லையுமென்னுளத்திளம்பனிவீசவுந்..........*
தொற்பகைப்பரிதி சுடரமுன்றேலா.............*
நற்பகனன்னிய வுடுவொளிநல்கவு..............*
மவையொருங்கணிதே வருங்கொடியலரிருச்......*
சுவையொருங்கமைகனி சுமந்துயர்திமிரவும்......*
பெருந்திருக்கலாபப்பீலிகளாடவு ...............*
மருந்திருக்காவலூரகத்துக்கண்டேன் ............*
கண்டுளம்பிணித்துருங்கனிதே. ....................*
னுண்டுளம்பிரிவினி யூழியுமரிதே...........(உச)

(குறம் - ஆசிரியச்சந்தவிருத்தம்.)

அரித்தையறிந்த திடத்தையறைந்த குடத்தியருங்குற மம்மேகேள்*
வரித்தனவண்டணி பற்றியவங்கை வரிக்குறிகண்டுழி காவல்லூர்....*
தரித்தவணங்குமிதித்தெழுதிங்கடரித்தபதந்தொழுகையேனைப்.....*
பரித்தவணங்கியபற்றளவொன்பொருள்பற்றியொருங்குயிர்வாழ்வா
[யே (உரு)

(கட்டளைக்கலித்துறை.)

வாழா வழுங்கா வினைக்கட னீந்தா வருந்தாவிர்கா .........*
டாழா திருக்கா வலூர்சென் றணுகத் தழுங்கியநீ.........*

ராழார் கலிக்கள வுண்டெனு மில்லை யமரர்தொழுங். ......*
கேழா ரடியண்ணங் கின்புறுங் கேண்மை கிளர்கடற்கே. (உ௬)

(நேரிசைவெண்பா.)

கடற்கரைசூழ் காளைக் கருத்தழிக்கும் பாவ............*
வுடற்கரைசூழாவி யுளைவீர்—மிடற்கறைகொண். ......*
டாவலூர் வான்கதிசேர்ந் தாங்குவப்பீர் நாயகிசேர்....*
காவலூர்ச் சேர்ந்த கடை..........................(உ௭)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

கடைந்தமணியணிகடந்தவடிவொளி கலந்தவுருவொடுநீபயந் ......*
தடைந்ததிருமகனகன்றபொழுதயி ரகன்றவுடலெனநோவவுள்...*
ளுடைந்தவுனதிடருணர்ந்துநமதிட ருழங்கலெர்றிகுபகாவலூர்...*
மிடைந்தவருணலம்விளைந்ததிருமகன் மிளிர்ந்தவடிவடிகாட்டவே..*

(கட்டளைக்கலிப்பா.) (உ௮)

காட்டினிற்பினுழவல்கேந்தியகையிலேயடை நின்மகனேந்தியன். .*
பூட்டியின்சுவையாகவையாயிர ருண்டுவாழவிருந்துவழங்கிறு......*
றூட்டிலாண்டுநின்காவலிதாகவே நாகுதிங்களணிபணிதாளியுன். ..*
வீட்டிலென்னை விளித்தொருதாளையோர் விருந்தளிப்ப வெனக்கிரங்
காய்கொலோ.................................................(உ௯)

(இரங்கல்-ஆசிரியவிருத்தம்.)

இரங்கொழியா வினைக்கடலை நீந்தவுன்னன் பெனுமிதவையேறிமறை விளக்கேநோக்கி, நெருங்கொழியா வவாவிரவினீந்தியப்பா னீயாளு ந்திருக்காவலூர்சென்றின்ப, மொருங்கொழியா மனத்திருளே யொழிந்துமேல்வா ழும்பர்நாட்டெழுங் கரையைக்கண்டே னென்றேன்; மருங்கொழியாவாதவனுமதியுமீனும் வனைந்தணிந்தவுன்வடிவங் கண்டபோதே. ................................................(௩௰)

(தழை - கட்டளைக்கலித்துறை.)

போதவிழ் பூங்கொடி யாய்செங் கதிர்பூண்டாள் பொற்றழையா...*
மீதவிழ் மீன்றழை யாக்கொண்டாண் மஞ்ஞையாய் வெண்மதியைத்
தாதவிழ் தாமரைத் தாட்டழை யாவுற்று டாயரசாள்..............*
சீதவிழ் முத்த[illegible] காவலூர் சேர்த்ததுவே. .............(௩௧)

(அம்மானை.)

சீர்த்ததிருக் காவனலூர்த் தேவணங்கு தாட்கமல......*
நீர்த்ததிருத் திங்கண்மே னின்றனசா ணம்மானை.......*
நீர்த்ததிருத் திங்கண்மே னின்றனவென் றுமாகில்.....*

ஆர்த்ததிரு வண்டுவெப்ப வாங்கலரா வம்மானை..........*
போர்த்ததிருச் சோதியின்பப் போதலரு மம்மானை...*

போதலருந் தன்சினைக்காப் பூங்காவ லூரரசி.........*
யாதவனைத் தூசா யணிந்தனள்கா ணம்மானை..........*
யாதவனைத் தூசா யணிந்தனளென் றமாகின்..........*
மாதலர்பூ மேனிநலம் வாடாதோ வம்மானை...........*
மாதருணீர் மூழ்கிரவி வாய்குளிரு மம்மானை..........*

வாய்குளிர்பூங் காவனலூர் வாழவரம் பெய்யிறைவி....*
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தா ளம்மானை!.*
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தா ளாமாகிற்..*
றாய்குளிர்வாய் மீன்கதிர்முன் றோன்றுமோ வம்மானை*
தாய்குளிர்வாய்ச் சார்ந்தார்க்குத் தாழ்வில்லை யம்மானை. (௱௨)

(நேரிசைவெண்பா.)

மானெய்தான் வான்பெற்றான் வான்பேற்றான் காவலூர்..........*
மானெய்தான் மானுய் வரம்பெற்றுத்—தானரியை.............*
யானைமுனர் வைத்தின்று ளாயிரம்வாள் வேந்தனையோர் ........*
தானையாக் கொண்டெழுந்தா டான்..........................(௱௩)

(ஆசிரியவிருத்தம்.)

நானுகத்தடங்காதாய் மேனுகத்தடங்காவார் தனையன்றோ......*
னுகந்தானுகத் திழிந்துதவவெழுந்துதவ வரிமைகாட்டி...........*
வானுகத்தேனுகத் திருவரங்கடருவரங்கே வந்தாரன்றே...........*
கானுகப்பூநாகத் தரும்புதிருவிரும்புதிருக் காவலூரே..........(௱௪)

(ஆசிரியவிருத்தம்.)

காவலகத்தானுந் தேவமுகத்தானுங் கடவுளுயிர்த்தானு மடவுளுயிர்த்தானு, மோவலறுத்தானு மாவல்வெறுத்தானு மூலகுபுரிந்தானு மலகுபரிந்தானுந், தேவவரத்தானுங் காவகரத்தானுந் திசையையளித்தானு நசையையொளித்தானும், பாவிகணித்தானு மாவிபிணித்தானும் பண்டினையற்றானுந் தொண்டனையுற்றானே. ........ (௱௫)

(ஆசிரியவிருத்தம்.)

தாளணிந்தமதிமுதலாத்தமியனுமக்கமலத்தாடாங்கிலேனே, கோளணிந்தகுழலணிதார் குடைவண்டாய் புகழ்பாடி மதுவுண்ணேனே, வாளணிந்தவிலைப்படைவெல்வலிச்சிங்கமீன்றவொருமானுய்வந்தாள் கொளணிந்தகாவலூர்க்கிளர்புனத்துப்பசும்புல்லாக்கிடவேனே*

(கட்டளைக்கலித்துறை.)

கிடந்தேன் வினைக்கடன் மூழ்கிநீ தூக்கக் கிளைத்ததுயர்.........*
கடந்தே னியாடிருக் காவலூர் சேர்ந்தேன் கடிமலர்க்கா.........*
நடந்தே னறம்பொரு ளின்ப மெதிர்கொண்டெ னண்ணியுன்றூ...*
ளடைந்தே னினிவீ டடையேனோ வென்னுயி ராரொளிப்ய...(௩௭)

(கூழைகவ்வல்லாசம்-ஆசிரியவிருத்தம்.)

ஒளியுளியெனவின மணியணிகொடிகொணர் வானவர்நூறுஞ் சுமந்த
தொருபா, லுயிர்தருநிழலமரொளிதருகுடைகொணர் வே
றொருநூறுந்திரண்டதொருபா, லுருமணியணியுருவினரிடு
வளிவழி சாமரைநூறுஞ்செறிந்ததொருபால்...........*
துளியுளிமுகிலென முரசொடுபறையொடு பாடினர்நாமம் புகழ்ந்த
தொருபால், துளையுளகுழலொடுகூரலுகள்கலமொடு வீணை
கள்யாவுந்தெளிந்ததொருபால், தொனியுளவலையலைவனவெ
னமணியணிவானவர்சூழப்பணிந்ததொருபால்...........*
வெளியுளியிருளற வெயிலரசெழுமென வாதவனுருங்கலிங்கவடிவாள்
வினையறமனையுறமருளடவருளிடவாகனமாமிந்தெழுந்துவர
வே, விரைவடிவடியடியுறையுறுமறுவறுகாவனலூரிம்வதிந்த
னாகினாள்............................................*
களியுளியருள்பொருணிகழ்புகழ்கலைநிலைநாடுவிர்யாருந்துலைநந்தனாய
ராய்க், கழவிலகரமில மகரில நிகரிலநோகுவிர்யாருந்திரண்டு
மருவீர், கருணையள்கதியினள் கனிவினள்கடையிலள் பூவடி
நாளும்பணிந்துதொழுவீர்.......................(௩௮)

(நேரிசைவெண்பா.)

தொழுவாய்த் தொழுவாரிற் றூற்பகைநோய் தீரா...*
தழுவா ரழுவாரிங் கிலலைச்—செழுமாதின்.............*
காவலினை யுற்றார் கழிகுலத்தா ரேனும்வான்..........*
காவலரை யொப்பார் களித்து....................(௩௯)

(விருத்தம்.)

களிவிளைத்தனள் கலிவனைத்தனள் கதியமைத்தன ளாயினாள்.....*
வெளிவிளக்கின வெயிலுதித்தன விரைமுகத்தன காவலூ.........*
ருளியுதித்துரி யுடலிடுக்கணு முயிரிலக்கணு நீத்தவா ............*
விளிவிளைத்தன விகல்வடுப்பகை யிடரொருப்பட வொழியுமே(௪௰)

(கட்டளைக்கலித்துறை.)

ஒழியா முதலாய்த்தே வாதிக்க நீநிதா னுற்பவமா..........*
யழியா தொருவற்கே தாயு மகளுமா யாரமுதாய்ப்.........*

பழிநாக வெவ்விட மாற்று மருந்தாய்ப் பரகதிக்கோர்......*
வழியாய்த் துணையாய்நமைக்காப்பக்காவலூர்வைகின்றோ (சக)

(மருட்பா.)

வைகலெனவந்துமன்னுயிராற்கங்குலுறும். .....................*
வைகலைச்செய்தேயொளியைவாய்த்துயிர்த்தே—வைகினாள்...*

காவலூருறை காதலார்துறை........*
யோவலீர்களி யோதியாரொளி........*
தெளித்தநூலி திறந்த்சீலி............*
களித்தமாலை கயத்தவேலை............*
மந்திரமறைமொழி மண்டலகுறையொழி..*
சந்திரவடியினள் சந்துடுமுடியினள்........*
காதனாயகி கதிதரும்........................*
வேதநாயகி மெல்லடியணிவமே.......(சஉ)

(ஆசிரியவிருத்தம்.)

அணிவளங்களுள்மணிவளங்களுளருமைதத்தனண்மருள்வதைதத்தனள் பணிவணங்களுள் கணியண்ணுள் பழிவிலக்கவும் வழிதுலக்கவுந்...* துணியவீரமா யணியவாரமாய்ச் சுருதிவாயினள் பரிதிவேயினள். * கணியலங்கலாள் மணிவிலங்கலாள் காவலூரிறை டேவநாரியே...(சங)

(ஆசிரியச்சந்தவிருத்தம்.)

நாரியிவணயவாரியிவடயைநாரியிவடிருமாரியிவளுறைகாவலூர்ச்..* சாரிவரவரி தேரினிருபுடை தாரினமரர்கள் வேரிமதுமலர்தாழ்விலா வாரியிமிர்குழதேறியெழுபுகழ்மாரிகொடிகுடைமாரிகவரிகள் வாமெ னை, தேரிலெழிலெழு காரிறொலியலை நீரிறொலிமிகுதேரினிவள்வரு மரவமே..........................................................(சச)

(நேரிசைவெண்பா.)

அரவம் படவெழுந்தா ளாகம் படுத்து. .........*
மரவம் படச்சி றடியா—ளரவத்தாற்............*
பாருலகும் பேருலகும் பாவனையாத் தானனாகி.*
நேரொளியுங் காவனலூர் நீர் ................(சரு)

(இரங்கல்-ஆசிரியவிருத்தம்.)

நீராருந்தடமே தடஞ்சூழுநியமேநியமனுந்திருவேதிருச்சேருங்கா வ, லூராரும்பொழிலே பொழிலாருமுறைந்யேயுறைபாயுங்களியாற் களியேனே நானே, யாராருந்துயராற் றுயரோறவழியுற் றழியாத கதியிற் கதியாளம்தியோர், தாராருமடியே கதிராருமடியே தாராரு முடியே யுயிர்மாசில்கடமோ.................................. (சசா)

(நேரிசைவெண்பா.)

சுடர்முடியா யோர்குகைபு ணியீன்ற தோன்றற் *
படர்முடி யார்வந்து பணிந்தா—ரிடர்முடியா ..*
தின்றுணர்வார் காவன லூ ரெய்திப் பணியாரோ *
குன்று மெனக் கொண்ட கோது............(௪௭)

(கட்டளைக்கலித்துறை.)

கோதெனயாவுமுளத்தறக்கொய்மினிர் கோன்முடியாள்...........*
போதெனப்பூத்தசெந்தாளணிந்தேத்தவே பொய்ப்பொருள்சேர். *
காதலுங்காமமுங்கோபமுங்காவற் களிச்செருக்குந்..............*
தீதெனச்சேராதிருக்காவலூ ரம்மன்சீரடியே..................(௪௮)

(வஞ்சிப்பா.)

சீர்விளக்கியசெல்வியாய்ப்-பார்விளக்கியபாவையே .........*
தென்காவிரிதிரண்டொலிப்ப-மன்காவிரிமலர்கமழப் ........*
பூந்தாதகில்புடைநிழற்றத்- தீந்தாதகில்சினைகுளிர்ப்ப........*
வருட்காவலூரமைந்தளிப்பத்- திருக்காவலூர்ச்சேர்ந்தனை
சேர்ந்தபின்றனே பூண்பழிநையவெல்......*
மதிதானே பூண்பதந்தாள் றாராமோ........*
திருவடியொளி—ளந்தெளிவுறக்கண்டார்...*
கருவடியிருளறக்கண்டு ......................*
மருவடிமலரடிவான்கதியந்தமே ......(௪௯)

(சித்து-ஆசிரியவிருத்தம்.)

அந்தமிலா வன்னமிலா வாடையிலாநல்குரவுற் றமைந்தீர்காள் *
சுந்தரநாவிழற்காவலூரிருக்குமருஞ்சித்தன்றெழிலைக்கேண்மின்....*
னிந்தநின்வெண் கலமுமன் றுஞ் செம்பொன் றங்கஞ்சத்தாளிரண்டுஞ்
சேர்த்திச், சந்ததம்வெண்பித்தளையுமிரும்புஞ்செம்பொன்னாக்கித்த
ருவான்கண்டீர் ..................................................(௫௰)

(சம்பிரதம்-கட்டளைக்கலித்துறை.)

ஈரிடத் தீயத்தை வெட்டிட வெள்ளியா யீவன்றரா............*
நேரிடப் பித்தளை மாசறப் பொன்னென நேர்நிறையாய்....*
நீரிடும் வித்தைக் கிவையாக்கிக் காவலூர் நீர்த்தினிதாள்......*
நாரியின் கண்ணிரந் துண்பெணிச் சம்ப்ரத நான்செயவே (௫௧)

(நேரிசைவெண்பா.)

நாணுத் தயைதளிர்ப்ப ஞானநிழற் குளிர்ப்பத்...*
தேனூர் வரம்பரும்பச் சீர்கனிய—வானரு.........*

மஞ்சலிசெய் யுன்றா ளருட்காவ னாயகியே........*
யெஞ்சிலதோர் சோலை யெனக்கு.......... (௫௨)

(ஆசிரியவிருத்தம்.)

நக்கனமுத்தேயொப்பமுலைத்தேநக்குநிழற்காகாவனலூர்ப்.....*
புக்ககொடிக்கேதக்கவெழிற்கோர்பொற்புவமித்தெபுகழ்வாரா....*
...க்கமலர்க்கேமுத்துநகைக்கேயத்தமுதற்கேயரிதாகத்.............*
தொக்களவிற்கேமிக்ககவிற்கேதொக்கவனைத்தேதோற்பனவே (௫௩)

(விருத்தம்)

அணடாடுந்தடவாயினலமாடுமடக்கோயில்மேலார்ந்த ...........*
கனமாடுங்கொடியாடக்கனமாடுமுடியானைக்காண்பேனே........*
மனமாடுமறவாழிவடிவாகவறவாழிசேர்ந்தாடப்...................*
புனமாடுந்திருக்காவற்புனமாடிப்பெருக்காவலாற்றேனே. ....(௫௪)

(வெளிவிருத்தம்.)

ஆற்றார்களிப்பவினைத்தியாற்றமேநாயகியே...........*
தேற்றார்தெளிப்ப;மறைநூல்தேற்றுமாநாயகியே ......*
மாற்றார்வினைநீத்துயிர்நோய்மாற்றும்வானாயகியே.....*
ஊற்றார்காவனல்லூர்க்கினூற்றமாநாயகியே...... (௫௫)

(காப்பியக்கலித்துறை.)

மானாரஞ்சவஞ்சணிமண்பேய்மயலஞ்சக்.........*
கானார்காவலூரிடைகண்டேனொருமானை.........*
மானோதோவித்திறமென்றேன்மடமானாய்.. ...*
வானோத்துங்கோளரியீன்றாள்வரத்தென்றார் (௫௬)

(நேரிசைவெண்பா.)

தாராகத் தண்மதிப்பூந் தாளணிய வெஞ்னெஞ்சே. ...*
யாராய்ந்து வுல்குறைகண் டஞ்சற்க—பாராயோ. ....*
வானுள்வாள் காவலூர் வந்தெழுந்தா டாளணியாக். ....*
கூனுங் குறைமதியைக் கொண்டு.................... (௫௭)

(தாழிசை.)

கொண்டலாடி விலங்கல்கொண்ட குளிர்ந்தகொண்டல் பரந்தெழாக்
கொடிபடர்ந்துவளர்ந்தமுல்லைநகைத்துவாசமுகைத்துரா. *
யுண்டதேறலுமிழ்ந்தகொம்பொசிந்துவண்டுமுழங்கலோ-டுளியொ
ருங்குமகிழ்ந்துகான முகைத்துநீரியகாவலூர் .............*
விண்டளங்கள்விரும்பியண்டி விளங்கிமண்டிவிசம்புலாம்-விதுவணிந்
தபதங்கடாழ விழைந்துபாடவணங்கிரா.....................*

மண்டநாலி வியந்தசூலி விரிந்தசீலி வழங்குதே - வரியமாரி பரந்த வாரி புரந்தநாரிதொழேங்கொலோ. ............... (௫அ)

(தென்றல்-கழிநெடில்விருத்தம்.)

